செய்திக் கதிர்

மாநாடு சிறப்பு மலர்
1973

நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம் • சென்னை

எங்கள் எண்ணம்.........

எங்களுடைய சங்கத்தின் மூன்ருவது மாநில மாநாட்டிலே, சங்கத்தின் தொடர்பு சக்தியாக விளங்கவிருக்கும் இச் "**செய்திக் கதிரை**" சிறப்பு மலராக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிருேம். இந்த "**செய்திக் கதிர்**" மாதம் ஒரு மணியாக நம்மிடையே உதிரயிருக்கிறது. ஒரு சங்கத்திற்கும், அதன் அங்கத்தினர்களுக்கும் நெருங்கிய தொடர்பு அமையக்கூடிய வகையில் இந்த மாத இதழ் வேளாண்மை விஞ்ஞானத்தில் அன்ருட புதிய கண்டு பிடிப்புகளேயும், மாறுதல்களேயும், தாய்ச் சங்க நடவடிக்கைகளேயும், உறுப்பிலர்களின் எண்ண எழுச்சிகளேயும் தன்னகத்தே கொண்டு வெளிவரவிருக்கிறது.

இந்த சிறப்பு இதழில், சிந்தும் **கதிர் மணியில்** விளம்பரம் வழங்கிய நல்லோருக்கும் கவிதைகள், கட்டுரைகள் வழங்கிய அன்புசால் சங்க அங்கத்தினர்களுக்கும், இதனே சீரும் சிறப்புமாக மிகக் குறுகிய காலத்தில் வெளியிட உதவிய பதிப்பகத்தாருக்கும், இம் மலர் உருவாக ஒத்துழைத்த அன்புசால் நண்பர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியை சங்கத்தின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்

செய்திக் கதிர்

மலரில்

நமது மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர்
அவர்கள்

எங்களை அரசிதழ் பதவி பெற்ற
அலுவலர்களாக உயர்த்தியமைக்கு
எங்கள் உளங்கனிந்த நன்றியை
சமர்ப்பிக்கின்றோம்

ம ல ரி ல்

வேளாண்மைத்துறை அமைச்சராக
பொறுப்பு ஏற்றிருக்கும்
மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்
அவர்களுக்கு

தமிழகத்தில் பரந்து பணிபுரியும் வேளாண்மை பட்டதாரிகள் என்றும்போல பசுமைப் புரட்சி திட்டங்கள் மேலும் வெற்றி பெற ஆக்கப் பணிகளில் ஈடுபடுவோம் என்று உறுதி கூறுகிறோம்.

மலரில்

நமது மாண்புமிகு முன்னுள்
வேளாண்மைத்துறை
அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம்
அவர்கள்

எங்களை அரசிதழ் பதவி பெற்ற
அலுவலர்களாக உயர்த்தியதற்கு
உறுதுணையாக இருந்தமைக்கு
எங்கள் உளங்கனிந்த நன்றியை
சமர்ப்பிக்கின்றோம்.

எங்கள்

சின்னம்

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம்

TAMIL NADU GOVT. AGRI. GRADUATES' ASSOCIATION

பயிர் வளர்ப்போம்

ESTD.
1929

உயிர் காப்போம்

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம்
சென்னை

அங்கீகரிக்கப்பட்டது. { அரசு ஆணை எண் 831 தேதி 8-8-1929
அரசு ஆணை எண் 48 தேதி 6-1-1973 }

தாய்ச் சங்க பிரதிநிதிகள் 1972-73ம்-ஆண்டு

மாநில தலைவர்

திரு. மு. சிவசண்முகம், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில செயலாளர்

திரு. க. சச்சிதானந்தன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில இணைச் செயலாளர்

திரு. வ. பழனியப்பன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில பொருளாளர்

திரு. நீ. பாலகிருட்டினன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மத்திய பிரதிநிதி

திரு. சு. வடிவேலு, *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

ஆசிரியர், செய்திக் கதிர்

திரு. மு. கணேசன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

தணிக்கையாளர்கள்

திரு. நா. பாஷ்யம், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

திரு. நா. சொக்கலிங்கம், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

திரு. க. வெங்கிடசாமி, *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம்
சென்னை

அங்கீகரிக்கப்பட்டது. { அரசு ஆணை எண் 831 தேதி 8-8-1929
அரசு ஆணை எண் 48 தேதி 6-1-1973 }

தாய்ச்சங்க பிரதிநிதிகள் 1973-74ம் ஆண்டு

மாநில தலைவர்

திரு. மு. சிவசண்முகம், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில செயலாளர்

திரு. வ. பழனியப்பன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில இணைச் செயலாளர்

திரு. தி. ச. ரா. ராமகிருட்டினன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மாநில பொருளாளர்

திரு. நீ. பாலகிருட்டினன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

மத்திய பிரதிநிதி

திரு. ஜீ. கோவிந்ததாஸ், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

பல்கலைக்கழக பிரதிநிதி

திரு என். விஸ்வநாதன், *எம்.எஸ்.ஸி. (வேளாண்மை)*

தணிக்கையாளர்கள்

திரு. எஸ். சங்கரன், *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

திரு. ஆர். வேணு, *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

திரு. ரகுநாதராவ் *பி.எஸ்.ஸி. (வேளாண்மை)*

நன்றி மறவோம்............
நாளும் உழைப்போம்............

நன்றி மறப்பது நன்றன்று. ஏனெனில் இது மனிதப் பண்பாட்டிற்கு—நல் ஒழுக்கத்திற்கு, ஒவ்வாதது. செய்நன்றியை மறவாமல் இருப்பது எப்படி ? நமக்கு நன்மை செய்தவருக்கு நாம் நன்மை செய்தலே நன்றி மறவா நல்வழி.

நீரை மொண்டு தென்னை மரத்தின் தாளில் விடுகின்றோம் நாம். அந் நன்றியைத் தென்னை மறப்பதில்லை. தாளில் விட்ட நீரை, இனிய இளநீராக தன் தலையில் சுமந்து நம் தாகம் நீக்கத் தருகின்றது ! இதுவே நன்றிக் கடனுக்கு இலக்கணம்.

வேளாண் புட்டதாரிகளாகிய நாம் அரசின் முன்னர் பல கோரிக்கைகளை வைத்தோம். அவற்றில் சில முக்கியமானவற்றை அரசு பரிசீலித்து நமக்கு சாதகமாக உத்தரவுகள் வழங்கியுள்ளது.

அரசிதழ் பதிவு நிலைக்கு உயர்த்தியது, ' துணை வேளாண் அலுவலர் ' என பெயரை மாற்றி அமைத்தது, சங்கத்தின் பெயரை ' வேளாண் பட்டதாரிகள் சங்கம் ' என திருத்த அனுமதித்தது ஆகியன குறிப்பிடத் தகுந்தவை.

இவற்றை அரசு உடனடியாகத் தந்துவிடவில்லையே, இவற்றைப் பெற நீண்ட நாட்கள் இடைவிடாத முயற்சிகள் தேவையாக இருந்தனவே என நம்மில் பலர் கருதலாம். ஆனால் அப்படி நினைப்பவர்கள் ஒன்றை மறந்து விடக்கூடாது. நம்மைப் போல் எத்தனையோ சங்கங்கள்; அதில் சிலர், நம் கோரிக்கையை முற்றிலும் எதிர்க்கின்ற நிலை—இத்தனை சிக்கல்களுக்கும் மத்தியில் நம் கோரிக்கைகளை அரசு அனுமதித்துள்ளது என்றால் அது அரசின் உதவும் மனப் பான்மையை மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

செய்த சிறு உதவியையும் பெரிதென மதிப்பதே பண்பு; அதுவே அறிவுடைமையும் ஆகும்.

செய்நன்றிக்கு நன்றி கூறுகின்ற இத் தருணத்தில் அதற்கு முக்கிய காரணமாக இருந்த தமிழ்நாடு அமைச்சரவையை சீருடன் நடாத்தி செல்கின்ற மாண்புமிகு முதல்வர், டாக்டர், கலைஞர் அவர்களையும், நம் அன்பிற்கு என்றென்றும் பாத்திரமான முன்னாள் வேளாண்துறை அமைச்சர், மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களையும் நாம் என்றும் நினைவில் கொள்வோம்.

புதிதாக வேளாண்மைத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற காலத்து நமது சங்க நீண்ட நாள் கோரிக்கையில் ஒன்றாகிய விசை ஈருந்தி வாங்க வட்டியில்லாக் கடன் பெறுவதற்க்கு அன்புடன் வழி வகுத்த மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களுக்கு நன்றிகூற கடமைப் பட்டுள்ளோம்.

அரசு தரப்பில் அரசு தலைமைச் செயலர் அவர்களையும் வேளாண் துறை செயலர் அவர்களையும், கூடுதல் வேளாண் துறை செயலர் அவர்களையும், நிதித் துறை செயலர் அவர்களையும், நிதித் துறை கூட்டுச் செயலர் அவர்களையும், முன்னாள் வேளாண் துறை இயக்குநர் உயர்திரு அரிபாஸ்கர் அவர்களையும், இன்னாள் இயக்குநர் உயர்திரு அந்தோணி அவர்களையும் என்றென் றும் மறவோம்.

ஆனால், இன்னொரு முக்கியமான உண்மையை யாரும் மறந்து விடக் கூடாது. அது இது தான் :

சில சலுகைகள் நமக்காகச் செய்யப்பட்டது என்றால் அது நம் தகுதிக்காகத்தான். நம் தகுதியை நாம் காப்பாற்றுவது தலையாய கடன். எப்படி ?

நாம் விவசாயியின் தோழன்; நம் நாட்டின் ஒவ்வொரு விவசாயியின் நல்வாழ்க்கையே நம் குறிக்கோள்; அவன் நல்வாழ்வு வாழ, விவசாயம் செழிக்க நாம் பணி செய்வதே நம் கடன் என்ற எண்ணத்தை நம் நெஞ்சினுள் இருத்தி, பணி செய்து, பிறரையும் வாழவைத்து, தம் நல் வாழ்விற்கு அடிகோலுவோமாக ! !

RAJ BHAVAN

Madras-22

March, 26, 1973.

MESSAGE

I wish the State Level Conference of the Tamil Nadu Government Agricultural Graduates' Association success.

(Sd.) K. K. SHAH
Governor of Tamil Nadu



மேதகு கே. கே. ஷா
தமிழக ஆளுநர்

அண்ணா நீ......

தலைமைப் பொறுப்பை
    தம்பியிடம் தந்துவிட்டு
உழைத்துக் களைத்த மன்னா—அண்ணா
    உறங்க நீ சென்றனையோ !

தக்கார் புகழ் பாட
    தம்பி தரணியாளும்
அக் காட்சியினைக் காண
    அண்ணா நீ வருவதெப்போ !

ஏழை எளிய மக்கள்
    என்றும் பசித்திருந்தோர்
காலைக் கதிர் கண்ட
    சோலை மலர்த் தாமரையாய்

தொல்லைகளைத் துறந்து இன்ப
    எல்லையினைக் காணும் காட்சி
பொல்லார்க்கும் மனம் திறந்த
    அண்ணா நீ பார்த்தனையோ !

அமரர் மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9
21—3—73

பரம்பரை பரம்பரையாகத் தமிழ்நாட்டில் நிலவி வந்த உணவுப் பற்றுக்குறையை அறவே அகற்றி, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு இன்றையத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தீவிரத் திட்டங்களும், அத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பட்டதாரிகள் காட்டிய ஊக்கமுமே தமிழ் நாட்டில் 'பசுமைப் புரட்சி' தோன்றுவதற்கும், உணவு உற்பத்தியில் வரலாறு காணாத அளவுக்கு முன்னேற்றம் ஏற்படுவதற்கும் மூலகாரணங்களாகும் என்றால் மிகையல்ல! 1966-67-ஆம் ஆண்டில் 57.88 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 1972-73-ஆம் ஆண்டில் 72.02 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு உயர்ந்துள்ளதற்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பட்டதாரிகளின் உழைப்பும் ஒருவகையில் காரணம் என்பதைத் தயக்கமின்றித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேளாண்மைப் பட்டதாரிகளை அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்களாக ஆக்க வேண்டும்; அவர்களின் அடிப்படைச் சம்பள விகிதத்தை உயர்த்தவேண்டும் என்ற நீண்ட கால கோரிக்கைகளைப் பொருளாதார நெருக்கடிக்கிடையிலேயும் அண்மையில் நிறைவேற்றி வைத்ததிலிருந்தே இன்றைய அரசு, 'உழைப்புக்கு மதிப்பு தரும் அரசு' 'நன்றி மறவாத அரசு' என்பதை வேளாண்மை பட்டதாரிகள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். நன்றி மறவாமல், வேளாண்மை பட்டதாரிகள் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் திட்டங்களை எல்லாம் விரைந்து முடித்து, வெற்றி தேடித்தர முழு மூச்சுடன் உழைப்பார்கள் என்று நம்புகின்றேன். எனவே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் வருகிற ஏப்ரல் திங்களில் மூன்றாவது மாநில மாநாட்டை சென்னையில் நடத்தவிருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். அம் மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெறவும், அம் மாநாட்டினையொட்டி வெளியிடப்படவிருக்கும் "செய்திக் கதிர்" சிறப்பு மலர் வேளாண்மை உற்பத்தியை விரைவாகப் பெருக்குவதற்குரிய அறிவியல் அடிப்படையான வேளாண்மைக் குறிப்புகள், சாதனைச் சரிதங்கள், உழவர் வாழ்வை உயர்த்துவதற்குரிய வழிவகைகள் ஆகிய பல்வேறு நறுமணம் பரப்பும் வண்ண மலராக அமைய வாழ்த்துகின்றேன்.

(ஒ-ம்) மு. கருணாநிதி

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்

தமிழ்நாடு முதலமைச்சர்

திருக்குவளை தனில் மலர்ந்த—தென்பொதிகை
செந்தமிழர் காவல நீ—புரட்சியென
உருத்திவரும் பகைவென்று—தமிழினத்தோர்
உய்யும் வகை செய்து உலகாண்டு வாழியவே !

SI. PA. ADITANAR, M.A.,
BAR-AT-LAW
Minister for Agriculture

FORT ST. GEORGE
MADRAS-9
2-8-1973

I am glad to learn that the Tamil Nadu Agricultural graduates Association (formerly Tamil Nadu Agricultural Upper Subordinates Association) is holding its third State Level Conference in Madras this month.

2. Tamil Nadu is engaged in a massive programme of Agricultural Development. This programme can succeed, only if there is total involvement in it by the Agricultural graduates working in the Department of Agriculture.

3. I see, from past records, that the graduates of the Agriculture Department have done extremely well in promoting the various schemes and programmes drawn up by the Government for the Development of Agriculture.

4. We in the Agriculture Department have a mission to fulfil, namely raising the standard of living of the people. This mission could be accomplished by increasing the I. A. D. (Income per acre per day) and by realising that Agriculture is an Industry by itself, and its productivity should be accelerated. In this noble task, the Agricultural graduates are engaged; and I wish them all success.

(Sd.) SI. PA. ADITANAR,
Minister for Agriculture.



மாண்புமிகு சி. பா. ஆதித்தனர் அவர்கள்
வேளாண்மைத்துறை அமைச்சர்

GOVERNMENT OF TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS

ஏ. பி. தர்மலிங்கம்
வேளாண்மைத்துறை அமைச்சர்

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9
28—3—73

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பதை நன்கு உணர்ந்துள்ளதாலேயே இன்றைய தமிழ்நாடு அரசு பசிப்பிணி போக்கும் பணிகளுக்கு முதலிடம் கொடுத்து வருகிறது. பசிப்பிணி போக்கும் மருத்துவர்களாக விளங்கும் உழவர் பெருமக்களிடையே அறிவியல் அடிப்படையான நவீன வேளாண்மைச் சாகுபடி முறைகளைப் பரப்பிடும் தொண்டர்களாக தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பட்டதாரிகள் விளங்கி வருகிறார்கள். தமிழக உழவர்கள், பழமையில் ஊறியவர்கள் என்றிருந்த நிலையை மாற்றி, இந்தியாவிலேயே மிகவும் முற்போக்கான உழவர்கள் என்ற பட்டியலிலே இடம் பெற்றுள்ளார்கள் என்றால், அதற்கு தமிழ்நாட்டு வேளாண்மைப் பட்டதாரிகளின் இடையறா முயற்சியும், உழைப்புமே காரணங்களாகும்.

எழுதப் படிக்கத் தெரியாத எண்ணற்ற பாமர உழவர்களின் வாழ்வை வளப்படுத்த, ஆரவாரமின்றி அமைதியாகப் பணியாற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பட்டதாரிகள், பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலிலிருந்துப் பயிர்களைக் காக்கும் மருத்துவர்களாகவும் விளங்குகின்றார்கள். வேளாண்மைப் பட்டதாரிகளின் உழைப்பால் மலர்ந்ததே 'பசுமைப் புரட்சி' அதன் பயனாகவே தமிழ்நாட்டில் பஞ்சம் மறைந்தது! உணவுப் பற்றாக்குறை நீங்கியது! பிற மாநிலங்களுக்கும் அரிசி அனுப்பும் உன்னத நிலை ஏற்பட்டுள்ளது! இதை எண்ணியே இன்றைய தமிழ்நாடு அரசு, நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக்கிடந்த தமிழ்நாடு வேளாண்மைப் பட்டதாரிகளின் கோரிக்கையை அண்மையில் நிறைவேற்றியுள்ளது.

நாடு நலம் பெற, நாளும் உழைத்துவரும் வேளாண்மைப் பட்டதாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றிட இன்றைய தமிழ்நாடு அரசு என்றும் தயங்காது என்பதை, தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகளின் மூன்றாவது மாநில மாநாடு நடைபெறும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்வதுடன், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க எல்லா வகையிலும் விரைந்து செயல்படுங்கள்! போர் வீரர்களைப்போல் களத்திலே வெற்றி காண்பதையே இலட்சியமாகக் கொண்டு உழையுங்கள்! என்று அன்புடன் வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகளின் மூன்றாவது மாநில மாநாடு, மற்ற சங்கங்களின் மாநாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையவும், சிறப்பாக நடைபெறவும், அம் மாநாட்டையொட்டி வெளியிடப்படும் 'செய்திக் கதிர்' சிறப்பு மலர், நலம் பயக்கும் தேன்துளிகள் சிந்தும் வண்ண நறுமண மலராக அமையவும் வாழ்த்துகின்றேன்.

(ஒ-ம்.) ஏ. பி. தர்மலிங்கம்

மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள்

முன்னாள் வேளாண்மைத்துறை அமைச்சர்

நாடாண்ட பரம்பரையின்
நற்குடியிலே தோன்றி இதய
வீடாளும் அண்ணலே—அன்பிலே
வாழிய பல்லாண்டு வாழியவே !

இரா. நெடுஞ்செழியன்

கல்வி-உள்ளாட்சி அமைச்சர்

தலைமைச் செயலகம்

சென்னை-9

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கத்தின் மாநில மாநாடு நடைபெறுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலமாகத் திகழ தமிழக அரசு பல முன்னேற்றத் திட்டங்களை செயல் படுத்தி வருகிறது. தமிழக அரசின் பசுமைப் புரட்சித் திட்டம் வெற்றியடையச் செய்யும் பொறுப்பு தமிழக அரசு வேளாண்மைப் பட்டதாரிகளைச் சார்ந்ததாகும். மாநில மாநாட்டில் தமிழ்நாட்டின் வேளாண்மை மேலும் வளர்ச்சியடைய ஆலோசனைகள் வழங்கி சிறப்புடன் நடைபெறவும், 'செய்திக் கதிர்' சிறப்பு மலரில் வேளாண்மை வளர்ச்சிக் குறிப்புகளும், கட்டுரைகளும் இடம் பெற்று மணம் பரப்பிடவும் என் இதய நல் வாழ்த்துக்கள்.

(ஒ-ம்.) இரா. நெடுஞ்செழியன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்
கல்வித்துறை அமைச்சர்

மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள்
அரிசன நல அமைச்சர்

டாக்டர் சத்தியவாணிமுத்து

அரிசன நல அமைச்சர்

தலைமைச் செயலகம்

சென்னை-9

23—3—73

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் வருகின்ற ஏப்ரல் திங்களில் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாட்டினை நடத்துவது குறித்து மிகவும் மகிழ்வுறுகிறேன்.

நமது நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டிருக்கும் வேளாண்மையின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு இவ்வகையான மாநாட்டினை நடத்துதல் மிகவும் பாராட்டுதற்குரியதாகும். நமது நாட்டில் வேளாண்மை முன்னேறும் வகையில் இது போன்ற பல சிறந்த கருத்துக்களை வழங்கி தங்கள் சங்கம் மென்மேலும் சிறந்து செயல்பட விழைகிறேன்.

தங்கள் சங்கத்தின் மாநாடும், "செய்திக் கதிர்" சிறப்பு மலரும் சிறப்புடன் அமைய என் உள்ளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்.

(ஒ-ம்.) சத்தியவாணிமுத்து

க. அன்பழகன்
மக்கள் நல்வாழ்வுத்துறை
அமைச்சர்

தமிழ் நாடு அரசு
செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9.

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்க மாநாடு நடைபெறவிருப்பது கண்டு மகிழ்கிறேன். தமிழ் நாட்டின் மிகவும் முக்கியமான அடிப்படை தொழில் வேளாண்மை ஆகும். நாடு செழித்திடவும் மக்கள் நல்வாழ்வு நடத்தவும் விவசாயம் இன்றியமையாததாகும். தமிழ்நாடு அரசு தனது முன்னேற்றகரமான திட்டங்களினால் "பசுமைப் புரட்சியில்" மாபெரும் வெற்றி கண்டுள்ளது. அந்த வெற்றி மேலும் தொடரவும், சிறக்கவும் வேளாண்மைப் பட்டதாரிகளாகிய நீங்கள் உதவுவீர்கள் என நம்புகிறேன்.

தங்கள் மாநாட்டை ஒட்டி "செய்திக் கதிர்" என்ற மலரொன்று வெளிவரவிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

மலர் சிறந்து விளங்கவும், மாநாடு பயன் தரவும் விரும்பி வாழ்த்துகிறேன்.

அன்பன்,

(ஒ-ம்.) க. அன்பழகன்

மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்



மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள்
பொதுப்பணித்துறை அமைச்சர்

MANNAI P. NARAYANASAMY
Minister for Food

FORT ST. GEORGE
MADRAS-9

Dated : 23—3—73

Sir,

I am really happy to learn that the Third State Annual Conference of the Tamil Nadu Government Agricultural Graduates' Association is to be held at Madras in April 1973.

I am fully aware that the Agricultural Graduates have got an important role to play in the agricultural break-through that Tamil Nadu is witnessing in the recent years. They have already shown their love for work and their contribution in helping the State to attain the commendable status of being surplus in food and by highly knowledgeable men.

I send my best wishes for the success of your Conference and I also hope that the Agricultural Graduates will continue to work with machinery zeal to help Tamil Nadu to attain enviable position in food production in the country.

Yours sincerely,
(Sd.) MANNAI P. NARAYANASAMY



மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்கள்
கூட்டுறவுத்துறை அமைச்சர்



மாண்புமிகு செ. மாதவன் அவர்கள்
தொழில் அமைச்சர்

S. MADHAVAN
Minister for Industries

FORT ST. GEORGE
MADRAS-9

The country is witnessing an agricultural revolution. The contribution of Tamil Nadu in food production is highly commendable for, apart from being a surplus State in food production within a short span of five years, Tamil Nadu ranks first in the per capita agricultural production in the country. In this connection we cannot minimise the contribution made by the agricultural graduates in educating the farmers and making them follow package of modern agricultural practices to reap the highest yield from the soil. It does not mean that we should be complacent in this important area of our economy.

I am happy that the Tamil Nadu Government Agricultural Graduates' Association has proposed to conduct a Conference on State Level and exchange ideas on various matters, besides helping Tamil Nadu acquire still more better place in agricultural production.

I wish your Conference all success.

(Sd.) S. MADHAVAN

என். வி. நடராசன்
பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600009
4—8—1973.

அன்புடையீர்,

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம், தனது மூன்றுவது மாநில மாநாட்டை சென்னையில் நடத்த இருப்பது குறித்து மட்டிலா மகிழ்வு அடைகிறேன். தமிழ்நாட்டில் 1965-ம் ஆண்டில் நிலவிய உணவுப் பஞ்சம் தற்போது நீங்கி தன்னிறைவு அடைந்ததோடு அல்லாமல் உபரி மாநிலமாக திகழ்கிறது என்ருல் அந்த பெருமை தமிழ் நாடு வேளாண்மை பட்டதாரிகளையே சாரும். நடைபெறப்போகும் மாநாட்டில் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டு அதைப் பேணிகாத்து வரும் உங்களை செய்திக் கதிர் சிறப்பு மலர் வாயிலாக சந்திப்பதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் மாநாடு சிறப்புற நடைபெறவும் செய்திக் கதிர் சிறப்பு மலர் மணம் பரப்பி நல்ல பல கருத்துக்களை தன்னகத்தே கொண்டு வெளிவரவும் உங்கள் எதிர்காலம் வளம் பெறவும் வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்,

(ஒ-ம்.) என். வி. நடராசன்

மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள்
பிற்பட்டோர் நல அமைச்சர்



மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள்
வருவாய்த்துறை அமைச்சர்

S. J. SADIQ PASHA
Minister for Public Works

FORT ST. GEORGE
MADRAS-9

Dated : 26—3—73

MESSAGE

I am glad to know that the Tamil Nadu Government Agricultural Graduates' Association is releasing a Souvenir in commemoration of its State Conference.

Agriculture is the mainstay of our economy. Yet agriculture was lagging behind because of the cultivators being kept in the dark regarding the Modern Agricultural Technology.

The enlightened Agricultural Graduates can usher in a new era and they are full of promise for the future. Their zeal and application will help our society very much.

May all their zealous undertakings be all crowned with success.

(Sd.) **S. J. SADIQ PASHA**

K. RAJARAM, B. A.
Minister for Labour

FORT ST. GEORGE
MADRAS-9
8–8–1973

MESSAGE

I am really happy to learn that the Tamil Nadu Government Agricultural Graduates' Association is holding its 3rd Annual Conference at Madras during this month. The Agricultural graduates are playing a vital role in the increase of food production and making this State a surplus one. The work of the Agricultural Graduates is hard and praiseworthy. I wish all success in their endeavour.

I hope the 'Seythi Kathir', a special issue of the Association will bring home all technical matters relating to agriculture to all the agriculturists which will no doubt, help them to promote agriculture in modern ways.

(Sd.) K. RAJARAM,
Minister for Labour.

மாண்புமிகு க. இராசாராம் அவர்கள்
தொழிலாளர் நல அமைச்சர்



மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்கள்
மின் துறை அமைச்சர்

ஓ. பி. இராமன், பி.ஏ., பி.எல்.

மின்சாரத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்

சென்னை-9

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கத்தின் மாநில மாநாடு நடைபெறவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழகத்தில் பசுமைப் புரட்சி வெற்றியடைய வேளாண்மைப் பட்டதாரிகளின் பணி இன்றியமையாதது. தமிழக விவசாயிகள் பழைய விவசாய முறைகளை மாற்றி, நவீன முறைகளைக் கையாண்டு உற்பத்தி பெருக்கிட வேளாண்மைப் பட்டதாரிகள் முயற்சிக்கவேண்டும். அப்போதுதான் தமிழ்நாட்டில் வேளாண்மைப் புரட்சி வெற்றி பெறும்.

மாநாடு சிறப்புடன் நடைபெறவும், செய்திக் கதிர் சிறப்பு மலரில் வேளாண்மைப் புரட்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் கட்டுரைகள், அயல் நாட்டுச் சான்றுகள் இடம் பெற்று சிறப்புடன் வெளிவரவும் வாழ்த்துகிறேன்.

(ஒ-ம்.) ஓ. பீ. இராமன்

மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள்
போக்குவரத்துத்துறை அமைச்சர்



மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள்
அறநிலைத்துறை அமைச்சர்

மு. கண்ணப்பன்
அறநிலைய அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-9
21—3—73

பேரன்புடையீர்,

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்கம் தனது மூன்றாவது மாநில மாநாட்டை சென்னை மாநகரில், வரும் ஏப்ரல் திங்களில் நடத்த இருப்பதையும் இம் மாநாட்டினையொட்டி சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருப்பதையும் அறிந்து மெத்தவும் உவகையடைகிறேன்.

மாநாடு சிறப்புற நடந்தேறவும், வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலர் கருத்து மணம் கமழ்ந்து இலங்கிடவும் நான் என் இதயமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள,

(ஒ-ம்.) மு. கண்ணப்பன்

எஸ். முத்து, எம்.எல்.சி.
மேயர்

மதுரை
மாநகராட்சி
31—3—73

அன்புடையீர்,

அண்மையில் தங்களது சங்கத்தின் 3-வது மாநில மாநாடு வெகு சிறப்பாக நடைபெறவிருப்பது கண்டு மகிழ்வுறுகிறேன். வேளாண்மைத் துறையில் பல புதுமைகளை உண்டாக்கிய தங்களை பாராட்டுவதுடன் மென்மேலும் புதுமைகளைச் கண்டுபிடித்து பசுமைத் திட்டத்தை வெற்றி பெற இம் மாநில மாநாடு உதவும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, விழா சிறந்து விளங்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

தங்கள்,
(ஒ-ம்.) எஸ். முத்து



வணக்கத்திற்குரிய மதுரை மாநகரத்தந்தை
திரு. எஸ். முத்து அவர்கள்
சட்டமன்ற மேலவை உறுப்பினர்



மதிப்பிற்குரிய திரு. சோ. ஆறுமுகம் அவர்கள்
சட்டமன்ற உறுப்பினர்
பெருந்தலைவர் : வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம்
தலைவர் : சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

S. ARUMUGAM, M.L.A.
Chairman, Salem Co-operative Central Bank Ltd,
Chairman, Veerapandi Panchayat Union.

SALEM
25-3-73

தமிழ்நாடு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாடு நடைபெற இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழகத்தின் தகைசால் தலைவர் அமரர் அண்ணா அவர்கள் வகுத்துக்கொடுத்த வழியில், தமிழகத்தை சிறப்புடன் நடாத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் வேளாண்மைத் திட்டங்களை தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகளாகிய நீங்கள் சிரம்மேற்கொண்டு செயல்படுத்தி உணவு உற்பத்தியில் அண்டை மாநிலங்களும் போற்றும் அளவிற்கு தன்னிறைவு பெற்று தமிழகம் வெற்றிநடை போடுவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதே போல் வருங்காலங்களிலும் வேளாண்மைத் திட்டங்களை செம்மையான முறையில் செயல்படுத்தி, ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் உழைத்து உணவு உற்பத்தியை பன்மடங்கு ஆக்குவீர்கள் என நம்புகிறேன்.

இந்த மாநாட்டிலே வெளியிடப்படவிருக்கும் "செய்திக் கதிர்" என்ற மலர் பல வகையிலும் சிறந்து விளங்கி, பயன் தரத்தக்க வகையில் அமையவும், மாநாடு சிறப்புடன் நடைபெறவும் என்னுடைய வாழ்த்துக்கள்.

அன்பன்,

(ஒ-ம்) S. ஆறுமுகம்

INDIAN COUNCIL OF AGRICULTURAL RESEARCH

Krishi Bhavan, Dr. Rajendra Prasad Road, New Delhi-1

Director-General, ICAR &
Secretary to the Government of India

March 15, 1973

Rapid agricultural progress holds the key to getting more jobs and income in addition to food. Great opportunities exist for converting the scientific knowledge gained during 1960, into wealth meaningful to our people. In this task the Tamil Nadu Agricultural Graduates' Association can play a significant role.

(Sd.) M. S. SWAMINATHAN



டாக்டர் ஜி. அரங்கசாமி, B. Sc. (Ag.), Associate I.A.R.I.,
Phd. (Rutegeas), F.A.Sc., F.P.S.I., F.I.S.A.C.
துணை வேந்தர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம்

TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY

Dr. G. RANGASWAMI
VICE-CHANCELLOR

COIMBATORE-3

March 20, 1973

MESSAGE

I am glad to know that Tamil Nadu Agricultural Graduates' Association is holding its Third Annual Conference at Madras during April 1973. It is gratifying to note that the Association has been functioning effectively to bring benefit to the farmers of Tamil Nadu. Agriculture being the back-bone of the University, it has to become more and more science-based. In order to make it science-based, we need more of agricultural scientists to carry out extension work to disseminate the rapidly developing scientific knowledge in different branches of agriculture. The agricultural graduates who pass out of this University and from other colleges will have to play an increasingly important, effective and efficient role in disseminating the knowledge. I am sure the Agricultural Graduates' Association will always keep this in mind so that the farmers of Tamil Nadu get the maximum benefits from such an activity.

(Sd.) **G. RANGASWAMI**
Vice-Chancellor

திரு. எஸ். சபாநாயகம், ஐ. ஏ. எஸ்.
தமிழ்நாடு அரசு தலைமைச்செயலர்



திரு. M. G. இராசாராம், I.A.S.
முதல் உறுப்பினர் வருவாய்த்துறை கழகம்
துணைத் தலைவர் மாநில திட்டக்குழு
ஆணையாளர் போக்குவரத்து துறை
தலைவர் மாநில தொழில் உற்பத்தி வாரியம் தமிழ்நாடு லிமிடெட்

M. G. RAJA RAM, I.A.S.,

Deputy Chairman.

STATE PLANNING COMMISSION,

EZHILAGAM, MADRAS-5

Dated 10th April 1973

I am happy to note that the Tamilnadu Agricultural Graduates' Association will be having its State Level Conference during this month.

Even today, Agriculture supports nearly 73.3% of the rural population. Thanks to the dedicated work of the Tamilnadu Agricultural Graduates' the State has witnessed quite a transformation in agricultural practices. Today, the cultivators have acquired a scientific temper with the result the application of fertilisers, usage of pesticides and insecticides are common practice. There is no doubt that we will not only sustain the present level of agricultural production but improve on it in the years to come.

However, it should be realised that the need of the hour is to bring in Science and Technology to Dry Farming in the State and make it possible for the small and marginal farmers to step up their productivity.

We should also think of diversification of cropping patterns with a view to produce the different types of foodgrains to make available a balanced diet to the people of Tamilnadu. In addition, we should also think of producing more of the commodity crops based on which Agro-Industries could be developed in a purposeful way. The Tamilnadu Agricultural Graduates' have a vital role to play in this process. Being one of them myself, I have no doubt that they will rise up to the occasion and bring Tamilnadu up to a standard of perfection in Agriculture.

I wish the Conference all success.

Yours sincerely,
M. G. RAJA RAM

பி. என். வேதநாராயணன், ஐ. ஏ. எஸ்.

அரசு செயலாளர்,

வேளாண்மைத்துறை.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,

சென்னை - 9

நாள் : 11—4—1973

அன்புடையீர்,

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கத்தின் மூன்றாவது மாநில மாநாடு ஏப்ரல் திங்களில் நடைபெறுவதையொட்டி மகிழ்ச்சி அடைகிறேன். இவ் விழாவில் தங்கள் சங்கத்தின் தொடர்பு சக்தியாக விளங்கும் செய்திக் கதிரை மாநாடு மலராக வெளியிட விருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இன்று தமிழகத்தில் வேளாண்மைப் பட்டதாரிகள் அரசின் பல பசுமைப் புரட்சித் திட்டங்களை உண்மை யோடு கூடிய உழைப்பின்மூலம் வெற்றிகரமாக நடாத்திச்சென்று இன்று தமிழகம் உணவு உற்பத்தியில் தன்னிறைவுபெற காரணமாயிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழகத்தில் வருகிற ஆண்டுகளில் நடைமுறையில் செயல்படுத்தப்போகும் பல வேளாண்மை திட்டங்களின் குறிக்கோள்களை, சாதாரண உழவரும் அதன் பயனை அடைவதற்கு, மாநிலம் எங்கும் பணியாற்றும் வேளாண்மைப் பட்டதாரிகள் என்றும் போல் தங்களுடைய கடமை உணர்வுடன் கூடிய ஒத்துழைப்பை அரசுக்கு நல்கி, உணவு உற்பத்தியில் இன்னும் பல வெற்றிச் சாதனைகளை குவித்திடவேண்டுமென்று நான் இத்தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாநாடு சிறப்புற நடைபெற என்னுடைய நல் வாழ்த்துக்கள்.

பி. என். வேதநாராயணன்

திரு. P. N. வேதநாராயணன், I.A.S.
வேளாண்மைத்துறை செயலாளர்

திரு. A. வெங்கிடரமணன், I.A.S.
நிதித்துறைச் செயலாளர்

T. V. ANTONY, I. A. S.
Director of Agriculture

CHEPAUK
MADRAS-5

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் தமது மூன்றுவது மாநில மாநாட்டினை சென்னையில் நடத்துவது அறிந்து மகிழ்வெய்துகின்றேன்.

வேளாண்மைப் பட்டதாரிகளின் நிலை அரசிதழ் பதிவுபெற்று அலுவலர்களாக, உயர்த்தப்பட்டுள்ளது பெருமைக்குரியதாகும். அதே சமயத்தில் உங்கள் மீது "அரசிதழ் பதிவு" அளித்ததன் மூலம் அதிக பொறுப்புகளை ஏற்க தயாராக இருப்பீர்கள் என நம்புகிறேன்.

தற்பொழுது நடைபெற்று வரும்; தீவிர ரபி சாகுபடித் திட்டத்தில், தாங்கள் ஆற்றி வரும் பணிகள் போற்றதற்குரியன. ஆற்றிய பணி அதிகமென எண்ணி, அயர்ந்துவிடாது, உணவு உற்பத்தியினை மென்மேலும் உயர்த்திட, தங்கள் சங்கம் பாடுபடுமென நம்பு கின்றேன். தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையினரால் எடுக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் வணிகப் பொருட்கள் உற்பத்தியைப் பெருக்க பற்பல திட்டங்களும் வெற்றி பெற தங்களது அயராத உழைப்பும், ஒத்துழைப்பும், என்றென்றும் இருக்கு மென்ற நம்பிக்கை எனக்குண்டு.

மாநாடு இனிதமைய என் வாழ்த்துக்கள். மாநாட்டின் தொடர்பாக வெளியிட விருக்கும் "செய்திக் கதிர்" சிறப்பு மலர், வேளாண்மை பற்றிய விளக்க நூலாக, உங்களுக் கோர் வழிகாட்டியாக, உழவனின் கையேடாக அமைய எனது அன்பார்ந்த வாழ்த்துக்கள்.

டி. வி. அந்தோணி



திரு. T. V. அந்தோணி, I.A.S.
வேளாண்மை இயக்குநர்

திரு. நா. ஹரிபாஸ்கர், I.A.S.
முன்னாள் வேளாண்மை இயக்குநர்

அ. வெங்கட்ராமன், பி.எஸ்ஸி. (வே), எம்.எஸ்.,
கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி)

11-வது குறுக்கு சாலை,
தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி-18
நாள் 26-3-73

அன்புத் தம்பியரே !

வணக்கம். சமூகத்திலே வேளாண் பட்டதாரிக்கு உரிய இடத்தை வாங்கித் தந்த செயல் வீரர்களே நீவிர் வாழ்க! வளர்க!! வரும் ஆண்டுகளிலும் உமது பயனுள்ள உழைப்பு என்றும் போல் மின்னி மிளிர்க !

தீந்தமிழ் நாட்டின் உழவர் பெருமக்களின் வாழ்வு பொருளாதாரத் துறையில் மேம்பாடு அடைய அல்லும் பகலும் அயராது சலியாது நீவிர் உவகையுடன் அள்ளித் தந்த உழைப்புக்கு ஈடும் இணையும் உண்டோ ! இந்த தன்னலமற்ற செயல் திறனாலன்றோ கருணை, பொன்னி, ஐ.ஆர். 20 என்ற பொன் கொழிக்கும் புது நெல் வகைகளைப் பரப்பி 35 லட்சம் டன் நெல் விளைந்த நம் மாநிலத்தில் இன்று 55 லட்சம் டன் விளைவித்துக் குவிக்கிறோம். நெல் விளைச்சலில் தன் நிகரில்லாத மாநிலம் என்ற பெயரையும் பெற்றிட்டோம். உணவுக்குத் தட்டுப்பாடு எனவே கட்டுப்பாடு என்ற நிலையை மாற்றி அடுத்தவருக்கும் அள்ளித்தர உண்டு இங்கே என்ற நிலையை அடைந்திட்டோம். இவற்றையெல்லாம் பொது மக்களும் அவர்தம் தலைவர்களும் எடுத்துச் சொல்லுவதைக் கேட்குந்தோறும் எத்தனை இனிக்கிறது ! தொடரட்டும் உங்கள் திருப்பணி.

பிறந்த இப் பொன்நாட்டிற்கு செய்ய வேண்டியது இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன. நமது ஆக்கப்பணி விஞ்ஞான முறையிலே இப்பொழுதுதான் தொடங்கியுள்ளது. நஞ்சையைப்போல புஞ்சையும் விளைந்திடச் செய்யவேண்டும். பருத்தியும் பயிறும், சோளமும் கம்பும், கடலையும் காய்கறிகளும், கரும்பும், கனி வகைகளும் மிகுந்திட செய்திடல் வேண்டும். வேளாண்மையை மையமாகக் கொண்ட தொழில்களை பெருக்கிடல் வேண்டும். வேளாண்மைக்கு வேண்டிய பொருள்கள் அத்தனையும் எளிதில் கிடைத்திட வகை செய்திடல் வேண்டும். விளைவித்த பொருள்களுக்கு உரிய விலை தந்திடல் வேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அச்சாணியாக வேளாண்மையை வளர்த்திட வேண்டும். இவற்றிற்கெல்லாம் நமது திறமையை முழு மூச்சுடன் ஈடுபடுத்தி உழைத்திட வேண்டும்.

மக்களின் ஏற்றமிகு வாழ்வுக்கு தொடர்ந்து உழைப்போம் ! உயர்வோம் !!

நன்றி !

(ஒ-ம்.) அ. வெங்கட்ராமன்



திரு. A. வெங்கட்ராமன். B.Sc, (Ag.) M.S.
கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி)

தாய்ச் சங்க பிரதிநிதிகள் 1973-74

பதவி பிரமாணம் எடுத்தல்

மாநில தலைவர்
மு. சிவசண்முகம்



மாநில செயலாளர்
வ. பழனியப்பன்

மாநில பொருளாளர்
நீ. பால்கிருட்டிணன்

மாநில இணைச் செயலாளர்
நி. ச. ரா. ராமகிருட்டிணன்

பல்கலைகழக பிரதிநிதி
என். விஸ்வநாதன்



மத்திய பிரதிநிதி
ஜி. கோவிந்ததாஸ்

தாய்ச் சங்க பிரதிநிதிகள் 1972-73



மாநில தலைவர்
திரு. மு. சிவசண்முகம், *பி.எஸ்.ஸி. (வே.)*



மாநில செயலாளர்
திரு. க. சச்சிதானந்தன், *பி.எஸ்.ஸி. (வே.)*



மாநில இணைச் செயலாளர்
திரு. வ. பழினியப்பன், பி.எஸ்.ஸி. (வே.)



மாநில பொருளாளர்
திரு. நீ. பாலகிருட்டிணன், பி.எஸ்.ஸி. (வே.)



மத்திய பிரதிநிதி
திரு. சு. வடிவேலு. பி.எஸ்.ஸி. (வே.)



ஆசிரியர், செய்திக் கதிர்
திரு. மு. கணேசன். பி.எஸ்.ஸி. (வே.)

தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்க செயற்குழு உறுப்பினர்கள், 1972-73.



கலைஞர் ஆட்சியில்

நமது சங்கத்தின்

பொற்காலம்

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT

Agriculture—Tamil Nadu Agricultural Subordinate Service—Posts of Agricultural Upper Subordinates in the Agriculture Department—Raising to Gazetted rank—Orders Issued.

Agriculture Department

G.O. Ms. No. 2663 **Dated the 18th Oct. 1972.**

READ : G. O. Ms. No. 1312, Finance, dated 30—9—1972.

ORDER

The Tamil Nadu Agricultural Upper Subordinate Association has been representing to Government that gazetted status may be conferred on the Agricultural Upper Subordinates on the ground that the Veterinary Assistant Surgeons and Junior Engineers who have undergone similar professional courses have been gazetted. The Director of Agriculture has recommended the request of the Association.

2. The Government have carefully examined the request of the Association and direct that the posts of Deputy Agricultural Officers (Agricultural Upper Subordinates) with B.Sc. (Agri.) qualification who are recruited direct and whose Scale of Pay has been revised in the G.O. read above be gazetted.

3. The Director of Agriculture is requested to submit necessary proposals for issuing consequential amendments to the Special Rules for Tamil Nadu Agricultural Subordinate Service and Tamil Nadu Agricultural Service.

4. This order issues with the concurrence of Finance Department—Vide its U. O. No. 827/F.S./P/72-1 dated 9-10-1972.

(By Order of the Governor)

P. N. VEDANARAYANAN,
Secretary to Government.

GOVERNMENT OF TAMIL NADU

ABSTRACT

Service Associations — Tamil Nadu Agricultural Upper Subordinates Association — Permission to change the name of the association as the " Tamil Nadu Government Agricultural Graduates' Association " — Granted.

PUBLIC (SERVICES I) DEPARTMENT

G. O. Ms. No. 48 **Dated : 6-1-1973**

Read :

(*i*) G.O. Ms. No. 831, Public (Services), dated 8-8-1929.

(*ii*) From the Director of Agriculture, Letter No. A1/107967/70, dated 5-2-71 and 8-2-72.

ORDER :

The President, Tamil Nadu Agricultural Upper Subordinates' Association, while submitting certain amendments to the existing byelaws of the Association has requested the Government for permission to change the name of the association as "The Tamil Nadu Government Agricultural Graduates' Association". The Director of Agriculture has recommended the request of the association. The Government accept the recommendation of the Director of Agriculture and permit the association to change its name as "The Tamil Nadu Government Agricultural Graduates' Association" and to amend the byelaw of the association accordingly.

(By Order of the Governor)

H. K. GHAZI
Special Additional Secretary to Govt.

1969–ஆம் ஆண்டு நாகப்பட்டணத்தில் நடைபெற்ற

எங்களது முதலாவது மாநில மாநாட்டில்

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள்

மாநாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முன்னாள்
சங்கத்தலைவர் மலர் மாலை அணிவித்தல்.



தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு முன்னாள்
சங்கத்தலைவர் வாழ்த்து மடல் வாசித்தளித்தல்.



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.



விழாவில் முன்னாள் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரும் முன்னாள் திருச்சி மாவட்ட செயலாளரும் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் உரையாற்றுகிறார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகிறார்கள்.

விழாவில் முன்னாள் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவரும் இன்னாள் வேளாண்மைதுறை இயக்குநருமான, திரு. அந்தோணி, I.A.S. உரையாற்றுகிறார்.

மாநாட்டிற்கு வருகை தந்த சங்க உறுப்பினர்கள்.

நாடு செழிக்க நமது கடமை

மு. சிவசண்முகம், பி.எஸ்.ஸி. (வே), மாநில தலைவர்

செந்தமிழ் திரு வாழும் தங்கத் தமிழ் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மை முதலிடம் கொண்ட சிறப்பினைப் பெற்றுள்ளது. நாட்டின் வளமான பொருளாதார வளர்ச்சிக்கும் ஒளிமயமான எதிர் காலத்திற்கும் வேளாண்மைதான் அடிப்படையாகவும் ஆணி வேர கவும் விளங்குகிறது என்ருல் அது மிகையாகாது. இதையே தான் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பொருளாதார பேராசிரியர் கூறுகிருர். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணம் விவசாயத்தில் அவர்கள் செய்த புரட்சியே என்று தொழில் துறையில் புரட்சி காண விவசாயப் புரட்சியே அடிக்கல்லாக அமையவேண்டும் என்றும் வலியுறுத்துகிருர். இவரது கூற்று அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு மட்டுமல்ல 75 சதவிகித மக்கள் வயல்களிலும் வரப்புகளிலும் உறைகின்ற இந்தியாவுக்கும் பொருந்தும் என்பதை உணர்ந்து நாம் செயல்படவேண்டிய நேரமிது.

தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த வேளாண்மை கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் பசுமைப் புரட்சித் திட்டங்களால் முன்னேற்றங் கண்டு இன்று உணவு உற்பத்தி 73 லட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாம், நெல் உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் நாம் பருப்பு, பருத்தி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், காய்கறி, பழ வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் புரட்சிகாண அயராது கண் துஞ்சாது பாடுபடவேண்டும். பெருகி வரும் மக்கள் தொகைக்கு இயற்கை நமக்களித்திருக்கும் குறைந்த அளவு வசதிகளைக் கொண்டு உணவு வழங்கும் பெரு நோக்கோடு, ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’ என்ற முதுமொழிக் கேற்ப வேளாண்மை பட்டதாரிகளாகிய நாம் உழவர் பெருமக்களை அணுகி புதியனவைகளைப் புகுத்தி புரட்சிகாண, கீழ் காணும் திட்டங்களில் வெற்றிகாண இமை மூடாது பாடுபடவேண்டும்.

1. வளரும் மக்கள் தொகைக்கு, சம சத்துணவு வழங்குதல்

இன்று தமிழகம், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, வளரும் மக்கள் தொகைக்கு சரி சம சத்துணவு வழங்குவதோடல்லாமல் அண்டை மாநிலங்கட்கும் ஏற்றுமதி செய்யுமளவிற்கு வெற்றி நடை போடுகின்றது. ஆனுல், பருப்பு, எண்ணெய் வித்துக்கள், கொழுப்புச் சத்துக்கள், பழ வகைகள், காய்கறிகள் முதலிய உற்பத்தித் திட்டங்களில் தன்னிறைவை நோக்கி, வெற்றி நடை போடுகின்றது. வேளாண் பட்டதாரிகளாகிய நாம், சம சத்துணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற, அயராது உழைக்கவும் சாதாரண குடிமகனுக்கும் இந்தச் சமநிலைச் சத்துணவு கிடைப்பதற்கு வழி வகுக்க அரும்பாடு படவேண்டும்.

2. வேளாண்மைச் சார்புற்ற தொழிற்சாலைகட்குத் தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல்

இன்று தமிழகத்தில் உள்ள நூற்பு ஆலைகட்கு ஆண்டு ஒன்றிற்கு 11·4 லட்சம் பேல் பருத்தி தேவைப்படுகிறது. ஆனுல் நமது தமிழகத்தில் 3·6 லட்சம் பேல்கள் பருத்திதான் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும் வேளாண்மை மூலப் பொருட்களாகிய பருத்தி, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் முதலியவைகள் அதிகமாக உற்பத்தி செய்யும் பொருட்டு இன்று தமிழகத்தில் பல உயர் விளைச்சல் ரகங்களை உழவர்களுக்கு வழங்கி இவைகளில் தன்னிறைவு பெருவதற்கு வேளாண்மை பட்டதாரிகள் முழு உழைப்புடன் பாடுபட வேண்டும்.

3. வேளாண் குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

தமிழகத்திலுள்ள கிராமப்புற குடிமக்களின் மக்கள் தொகையில் 75 சதவீதம் வேளாண்மையை நம்பியிருக்கிருர்கள். இவர்களுடைய

வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமென்றால், இன்று வேளாண்மையில் உற்பத்தித் திறனை உயர்த்தி நாம் செய்து வரும் ஆக்கப் பணிகளை இன்னும் தீவிரமாக்குவதோடல்லாமல், தமிழக அரசின் பல்வேறு பசுமைப் புரட்சித் திட்டங்களை உழவர் பெருமக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று செவ்வனே செயல்படுத்தி, அவர்களுடைய கழனியில், பல மடங்கு உற்பத்தியைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்த உழைக்க வேண்டும்.

4. அன்னியச் செலாவணியைப் பெருக்குதலும், சேமித்தலும்

தமிழகத்தில் விளைவிக்கப்படும் தேயிலை, காப்பி, எண்ணெய் வித்துக்கள், மக்காச்சோளம், வாசனைத் திரவியங்கள், பழங்கள் முதலியவைகளின் உற்பத்தியில் வேளாண்மைப் பட்டதாரிகளாகிய நாம் முழுக் கவனம் செலுத்தி, உற்பத்தித் திறனைப் பெருக்கி, தமிழகத்தின் அன்னியச் செலாவணியைப் பெருக்க வேண்டும். மேலும், ரப்பர், பருத்தி போன்ற வேளாண்மை மூலப் பொருட்கள் உற்பத்தியில் இன்னும் தனிக் கவனம் செலுத்தி அன்னியச் செலாவணியைச் சேமிப்பதற்கு அயராது உழைக்கவேண்டும்.

5. வேளாண்மையில் அதிகப்படியான வேலை வாய்ப்புகள்

தமிழக அரசினால், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட, தீவிர சாகுபடித் திட்டம், பல பயிர் சாகுபடித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம், மானாவாரிப் பகுதிகளில் வேளாண்மையின் விஞ்ஞான முறைகளைப் புகுத்துவதின் மூலம்--விவசாயத் தொழிலாளர்கட்கு அதிக வேலை வாய்ப்பை உண்டாக்குவதற்கு, வேளாண்மை பட்டதாரிகளாகிய நாம், மேற் குறிப்பிட்ட திட்டங்களைக் கடமை உணர்வுடன் செயலாற்றி, வேளாண்மையை நம்பியிருக்கும் விவசாயத் தொழிலாளர்கட்கு, கூடிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அன்றைய சோழநாடு பாரதப் போருக்கு உணவு படைத்ததாக கூறுவார்கள். இன்றைய தமிழ்நாடு உலக மக்களுக்கெல்லாம் உணவூட்டும் வகையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே நமது இலட்சியமாக இருந்திடல் வேண்டும். வரப்புயர, கோன் உயரும் வழிதனை உணர்ந்து வரப்பினை உயர்த்துவோம். வரமிருந்து பெற்ற தலைமை உயரட்டும். வாழ்வாங்கு வாழட்டும்.

கடமை தொடரட்டும்.........

"விதை செத்துதான் பயிர் முளைக்கிறது. விதையை அப்படியே உண்டு விட்டால் பயிர் கிடையாது. உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் வாழ்கின்ற தலைமுறையினர் தீர்த்துவிடுவார்களானால், வரும் தலைமுறைக்கு மிச்சம் இராது. வருங்கால தலைமுறைக்காகவும் உழைக்கின்றோம் என்பதை மனதில் பதியவைத்து இந்த தலைமுறையில் சில சிரமங்களை ஏற்றுக்கொள்வதை கடமையாக கருதவேண்டும்."

1970-ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற

எங்களது இரண்டாவது மாநில மாநாட்டில்

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்

அவர்கள்

முன்னாள் மாநிலத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை வரவேற்கிறார்.

வேளாண்மை பட்டதாரிகள் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அளித்த மனமுவந்த வரவேற்பு.



மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மாநாட்டில்
மலர் மாலை அணிவித்தல்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மாநாட்டில்
நெல் மாலை அணிவித்தல்.

திண்டுக்கல்லில் நடைபெற்ற மாநில மாநாட்டில்

மாண்புமிகு டாக்டர் கலைஞர் ஆற்றிய சிறப்புரை

மாநாட்டுத் தலைவர் அவர்களே, மதுரை நகரத் தலைவர் நண்பர் முத்து அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, வேளாண்துறை பணியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த நண்பர்களே, நாடாளுமன்ற சட்ட மன்ற உறுப்பினர்களே, தாய்மார்களே, பெரியோர்களே, இன்று திண்டுக்கல்லில் மிகுந்த எழுச்சியோடும் உற்சாகத்தோடும், நிறைந்த எதிர்பார்ப்போடும் நீங்கள் நடத்துகின்ற இந்த மாநாட்டில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். திண்டுக்கல்லில் நடைபெறுகின்ற சில பொதுக் கூட்டங்களிலும், மதுரையில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டங்களிலும் நான் கலந்துகொள்ள வேண்டும் என்ற நிகழ்ச்சி ஏற்கனவே குறிக்கப் பட்டிருந்ததாலும் நம்முடைய நண்பர் மதுரை முத்து தொலைபேசி மூலமாக இந்த மாநாட்டிலே நான் கலந்து கொள்ளவேண்டும் என்று கேட்டபோதே நான் தயக்கத்தோடு வேண்டாமே என்று சொன்னேன். ஆனால் அவர்கள் ஒரு 5 நிமிட நேரம் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டு விட்டு பிறகு முதலிலே ஏற்பாடு செய்கின்ற நிகழ்ச்சிகளிலே நீங்கள் கலந்து கொள்ளலாம் என்று உறுதியளித்த பின் தாங்கள் 5 நிமிடமில்லை நீண்ட நேரம் உங்களுடைய மாநாட்டில் நான் கலந்து உங்கள் அனைவருடைய உரையினை கேட்கவும் பல்வேறு கருத்துக்களைப் பெறவும் ஒரு அரிய வாய்ப்பினை இங்கே பெற்றேன்.

இந்த சங்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் பேசிய நேரத்திலும் மாநாட்டை துவக்கி வைத்தவரும், வரவேற்றவரும், மாநாட்டின் தலைவரும் பேசிய நேரத்திலும் என்னையும் இன்றுள்ள அரசையும் வானளாவப் புகழ்ந்தார்கள். பழைய காலத்திலே பாணர்கள், புலவர்கள் இவர்கள் எல்லாம் அரசர்களை புகழ்வார்கள். புகழ்ந்து பாடினார்கள் என்பதோடு கட்டுரை முடியாது, யானைகளைப் பெற்றார்கள், பொற்கிழிகளைப் பெற்றார்கள் என்றெல்லாம் தான் கட்டுரை முடியும். அதைப் போல நீங்கள் இங்கே என்னைப் புகழ்ந்தீர்கள். இந்த அரசை புகழ்ந்திருக்கின்றீர்கள். ஆனால் ஒரே ஒரு வேறுபாடு, பாணர்களும் புலவர்களும் அரசர்கள் இருக்கும் இடம் சென்று புகழ்ந்து பாடி பரிசுபெறுவார்கள். நீங்கள் வந்த இடத்திலே புகழ்ந்து பாடி பரிசு பெறுவது ...யலுமா என்பதுதான் இன்றைக்கு கேள்விக் குரியதாக இருக்கிறது. நீங்கள் உங்களுடைய கோரிக்கைகளை வைத்த நேரத்தில் நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். காரணம் விவசாயத்துறை டைரக்டர் வந்திருக்கிறாரா அல்லது விவசாயத்துறை செயலாளர் வந்திருக்கிறாரா, விவசாயத்துறை தலைமை அதிகாரி வந்திருக்கிறாரா என்று நான் சுற்றுமுற்றும் பார்த்தேன், பார்ப்பதற்கு காரணம், நீங்கள் இங்கே வைத்துள்ள 9 கோரிக்கைகளில் ஒன்றிரண்டையாவது உடனடியாக இங்கே நிறைவேற்றுவேன் என்று சொல்லலாம் என்பதற்காக அவர்களை கலந்து கொள்ள நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். நீங்கள் சமர்த்துப் பிள்ளைகள் என்று பேசினீர்களே தவிர நீங்கள் அதிலே கொஞ்சம் சாமர்த்தியமாக நடந்து கொள்ளவில்லை. அவர்களை இம் மாநாட்டில் நீங்கள் எப்படியாவது அழைத்திருப்பீர்களே யானால் நான் இங்கேயே, நானும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் அவர்கள் இடத்திலே கலந்து பேசி உங்களுடைய கோரிக்கைகளில் சிலவற்றையாவது உடனடியாக ஒப்புக்கொண்டேன் என்ற அளவில் நான் உங்களுடைய பாராட்டைப் பெற்றிருக்க முடியும். ஆனால் நீங்கள் வைத்திருக்கின்ற இந்த கோரிக்கைகள் அறவே புறக்கணிக்கத் தக்க கோரிக்கைகளா என்றால் இல்லை. அவைகள் உடனடியாக ஏற்கத்தக்க கோரிக்கைகளா என்றால் அதிலே நான் தயங்குவதற்குக் காரணமே இந்த பிரச்னைகளிலே ஒன்றைக் கொடுக்கும்போது இன்னும் பல பிரச்சினைகள் இதோடு தொடர்பாக சங்கிலி தொடர்போல

பல பிரச்னைகள் எழுகின்றன. இங்கே நான் ஒரு அதிகாரியை அழைத்து நீங்கள் கெசட்டட் அங்கீகாரம் பெறவேண்டும் என்று கேட்டதைப் பற்றி கேட்டபோது அதைத் தந்துவிடலாம் என்று சொன்னார். நான் உடனே அவரைத் திருப்பிக்கேட்டேன் பல இடங்களில் பஞ்சாயத்து யூனியன் பி. டி. ஒ க்கள் இருக்கிறார்களே அவர்களுக்குக் கீழே வேலை பார்க்கின்ற வேளாண்துறை அதிகாரியாக உள்ளவர்களுக்கு அந்த நிலை உயர்த்தப்பட்டால் அவர்கள் கேட்பார்களே என்று கேட்டபோது அவர் என்னிடத்திலே தயக்கம் காட்டினார், ஆக இந்த தயக்கத்தை இங்கு எடுத்துச் சொல்வதால் பிரச்னைகள் அடிப்பட்டுப்போகும் என்று மாத்திரம் நீங்கள் தயவு செய்து எண்ண வேண்டாம். நான் நீங்கள் வைத்திருக்கும் 9 கோரிக்கைகளையும் உங்களுக்காகவே இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக என்னுடைய அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, அங்கு இந்த துறை அதிகாரிகளையும் வேறு அதிகாரிகளையும் அழைத்து வந்து உடனடியாக திருத்தி தக்க முடிவுகளை எடுத்து, இன்னும் ஒருவார காலத்திற்குள்ளாக, நீங்கள் விரும்பி, மகிழத் தக்க, நல்ல முடிவுகளை நிச்சயமாக அறிவிப்பேன் என்ற உறுதியை மாத்திரம் இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் இங்கே திடீரென்று வேறுபல நிலைமைகளை யோசிக்காமல் நீங்கள் தந்திருக்கின்ற இந்த பிரச்சினைகளைப் பற்றி நானும் அம்மையார் அவர்களும் மாத்திரம் கலந்து பேசி அறிவித்து விடுவதால் வேறு பல சிக்கல்கள் ஏற்படுமென்பதை நீங்கள் அறியாதவர்களல்ல. ஆக வதான் சிக்கல் தீர்கின்ற வகையில் இவைகளை அணுகிட வேண்டும் என்பதற்காக கொஞ்சம் உங்களிடத்திலே நான் தவணை கேட்கிறேனே அல்லாமல், வேறு அல்ல. நீங்கள் இன்று ஆற்றுகின்ற பணியிலும், காலையிலே விதை தூவி, மாலையிலே நாற்று வளர்த்து, இரவிலே பயிராகி, மறுநாள் காலையிலே அறுவடை முடியும் என்பது நந்தனார் காலத்திலே மாத்திரம்தான் நடைபெற்றதே தவிர, நம்முடைய காலத்திலே நடைபெறுவதல்ல. ஆகவே, நீங்கள் அண்ணா காலத்திலே உங்கள் கோரிக்கைகளுக்கான வித்திட்டீர்கள். அதற்கு முன்பு, இன்னொரு மாநாட்டிலே அது நாற்றாக ஆகி இருக்கிறது. ஆக இந்த மாநில மாநாடு பயிர் பருவம். அடுத்து நாங்கள் வெளியிடப்போவது அறுவடை, இன்னும் ஒரு வார காலத்திலோ 2 வார காலத்திலோ நிச்சயமாக உங்களுக்கு கிடைக்கும் என்று மாத்திரம் நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் இந்தச் சமுதாயத்திலே எவ்வளவு இன்றியமையாத பணிகளை செய்து வருகின்றீர்கள் என்பதை பேசிய நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதை நாங்கள் உணராதவர்களல்ல. நீங்கள் ஒரு பெரிய மாற்றத்தை இந்த வேளாண்மைத் துறையில், செய்து காட்டத்தக்க பெரும் பணிகளில் ஈடுபட்டிருக்கிறீர்கள். வேளாண்மைத் துறையில் பழைய நிலைமைகளை எல்லாம் மாற்றி புதிய விஞ்ஞான கருத்துக்களை இந்த துறையிலே நாம் புகுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். அப்படி புகுத்துகின்ற இந்த காரியத்தில், நீங்கள் ஈடுபடுகின்ற நேரத்தில், விவசாய பெருங்குடி மக்களிடத்திலே, அடிக்கடி, அணுகி அந்த புதுமைகளை செய்வதில் நீங்கள் எளிதில் வெற்றிபெற முடியாது, என்பதையும், அதிலே மிகுந்த சிரமங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் அறியாதவனல்ல. விவசாயிகளிடத்திலே சென்று இன்றைக்கு, வேளாண்மைத் துறையிலே, அரசு ஏற்றுக் கொண்டிருக்கின்ற புதுமைகளை நீங்கள் விளைவிக்க விரும்புகின்ற புதுமைகளை அவர்களுடைய உள்ளத்திலே பதிய வைத்து ஏதோ வாழை மரத்திலே ஊசி ஏற்றுவது போல அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஊசியிலே நூலை கோப்பது போல் அவ்வளவு கவனத்தோடும், திறமையோடும் செய்யப்பட வேண்டிய காரியம், அது என்பதை நான் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றேன். அந்த காரியத்திலே நீங்கள் மிகுந்த திறமையோடு ஈடுபடுகின்ற காரணத்தினால்தான் 1968-ல் 57 லட்சம் டன் என்ற நிலைமையிலிருந்து, பிறகு வரண்ட காலத்தில் அது 53 லட்சம் டன்னாக ஆகி உங்களுடைய அயராத உழைப்பால், உங்களுடைய திறமையான பணியினால், உங்களுடைய கடமை உணர்வினால், இன்றைக்கு மீண்டும் அது 63 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்றால் அதற்காக நான் உங்கள் உழைப்பை பாராட்டுகின்றேன். இந்த வெற்றிக்கு உங்களுடைய உழைப்பும், உழவர்களுடைய பொறுப்பும் அரசாங்கத்தின் சலுகைகளும் இந்த மூன்றும்தான் வளையங்

மாநாட்டில் அமைச்சர் பெருமக்கள்.

மாநாட்டில் முன்னாள் சங்கத் தலைவர் திரு. க. வெ. கி. இராமகிட்டினன் உரை.

மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும்
மாண்புமிகு வேளாண்மைதுறை அமைச்சர் அவர்களும்

மாநாட்டில் முன்னாள் சங்க செயலாளர் திரு. த. சோமு உரையாற்றுதல்.

மாநாட்டில் வணக்கத்துக்குரிய மதுரை மாநகரத் தந்தை
திரு. முத்து எம்.எல்.சி. அவர்கள் உரையாற்றுகிறுர்.

மாநாட்டில் மாண்புமிகு வேளாண்மைதுறை அமைச்சர்
திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் உரையாற்றுகிறுர்.

மாநாட்டின் சிறப்பு மலரை மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சரிடம்
சங்க பிரதிநிதி வழங்குகிருர்.

மாநாட்டின் சிறப்பு மலர் முதல் பிரதியை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்
அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வழங்குகிருர்.

மாநாட்டில் முன்னாள் இணை வேளாண்மை இயக்குநர்
திரு. அ. வெங்கட்டராமன் உரையாற்றுதல்.

மாநாட்டிற்கு வருகை தந்த சங்க உறுப்பினர்கள்.

களைப் போல் இன்றைக்கு ஒன்று சேர்ந்து ஒரு தொடராக இன்றைக்குச் செயல்படுகின்றது. அந்த செயலின் வெற்றி விளைவுகளைத்தான் நாம் இன்றைக்கு அனுபவித்துக் கொண்டிருக் கிறோம். ஆகவே பாடுபடுகின்ற உங்களை இந்த அரசு பரிதவிக்க விட்டுவிடாது. எப்படி பயிருக்கு வருகின்ற ஆபத்தை தடுப்பதற்காக பல முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறோமோ, பயிருக்கு வருகின்ற ஆபத்தையே தடுக்க எண்ணும் போது அந்த பயிரை வளர்க்கின்ற உங்களுக்கு வருகின்ற ஆபத்தை நாங்கள் தடுக்காமல் இருந்து விடமாட்டோம் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம் என்று உங்களுக்கு கூறிக்கொள்கிறேன். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்பது விவசாயிகளிடையே புழங்குகின்ற பழமொழி. அந்த காற்று இப்பொழுதே அடிக்கின்றதா இல்லையா என்பது உங்களுடைய உள்ளத்திலே எழுகின்ற கேள்வி. நீங்கள் இங்கேயே, இந்த மாநாட்டிலே காற்று அடிக்கும், அதிலேயே தூற்றிக் கொள்ளலாம் என்று எண்ணினீர்கள். காற்று அடிக்கவில்லை. ஆகவே இங்கேயே தூற்றுதீர்கள். இதைத்தான், நான் உங்களுக்கு சொல்லுகிறேன்.

பருவத்தே பயிர் செய் என்பதும் வேளாண்மை துறையிலுள்ள பழமொழிதான். ஆகவே பயிர் செய்யப்படும் பருவத்தில் செய்யப்படும். அந்த பருவத்தில் பயிர் செய்ய ஆடிப்பட்டம் தேடி விதை என்பார்கள், பழைய காலத்திலே வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள். ஆகவே ஆடிப்பட்டத்திலே தேடி விதைக்கத்தான் நாம் அவசரப்பட்டு விடாமல், ஒழுங்காக, எடுக்கின்ற முடிவு மற்றவர்களை பாதிக்கத்தக்க முடிவாக இல்லாமல்—உங்களுக்கு அதனால், வீண் அபவாதம் வரமுடியாதவாறும், அனைவருக்கும் நல்ல முடிவாகவும் அரசுக்கு சங்கடம் ஏற்படுத்தாத முடிவாகவும் அந்த முடிவு அமையவேண்டும் என்பதற்காகத்தான் நான் உங்களுடைய பிரச்சினையை ஒருவார காலத்திற்கு ஆறப் போடுகிறேனே அல்லாமல் தரக்கூடாதென்ற எண்ணம் எனக்கு கிஞ்சித்தும் கிடையாது, என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொண்டு, நாங்கள் காத்திருப்பவர்கள் என்றார் இங்கு பேசிய நண்பர் ஹஜா ஷெரீப் அவர்கள். நான் அந்த வார்த்தையை எனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதற்காக அவரும் நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு முன்பு பேசிய நண்பர் அதையே சொன்னார், அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். நாங்கள் அழாமலே, அம்மாவிற்கு சங்கடம் தராமலே, நாங்கள் சமர்த்துப் பிள்ளைகளாக காத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். காத்திருங்கள்! நிச்சயமாக உங்களுக்கு கைமேற் பலன் கிடைக்குமென்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, நீங்கள் நான் வருகின்ற வழியெல்லாம் ஆரவாரத்தோடு வரவேற்றீர்கள். இங்கேயும் எங்களை பார்த்து பார்த்து பரவசமடைகிறீர்கள். நீங்கள் என்னுடைய முகத்தைப் பார்க்கின்ற நேரத்திலெல்லாம் இந்த கோரிக்கைகளிலே ஏதேனும் ஒன்றிரண்டையாவது ஒப்புக்கொள்ள மாட்டாரா என்ற ஆவல் தேங்கிய விழிகளோடு பார்ப்பதை நான் கவனிக்காமலில்லை. நான் வழக்கத்திற்கு மாறாக மணப்பெண்ணைப் போல் அதிகமாக தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்ததற்கு காரணமே உங்களைப் பார்க்கக் கூச்சப்பட்டுத்தான். ஆகவே விரைவில் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்வேன், அமைச்சர்களிடையேயும், அதிகாரிகளிடையேயும் கலந்து பேசி நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்று உங்களுக்கு எடுத்துக்கூறி இந்த இனிய மாநாட்டிலே உங்களை எல்லாம் சந்தித்ததில் பெருமகிழ்ச்சியடைந்து இந்த அளவிலே விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

"ஊருக்கு நல்லது சொல்வேன் — எனக்கு உண்மை தெரிந்தது சொல்வேன்"

தஞ்சையில் கருணு

R சுந்தரராஜன்

யாரறிவார் இந்த கருணு நெல்லை- குண
சிறப்போடு விளைவு தரும் அருமை நெல்லை—இங்கு

(*யாரறி*)

குறுகிய காலத்தில் விளையும் பயிர்—அது
குறைவில்லா நிறைவு தரும் குறுவைப் பயிர்
கருணை மழை பொழியும் கார் முகில் போல்
காலத்தில் பலன் தந்து காத்திடும் நெல்

(*யாரறி*)

குறுவை பட்டத்திற்கொரு ரகம் வேண்டுமா ?
குட்டை வகையான ஒரு பயிர் வேண்டுமா ?
அதிக உரம் ஏற்கும் நெல் வேண்டுமா—அல்லது
மாவுக்கு இருபத்தைந்து கலம் வேண்டுமா

(*யாரறி*)

தஞ்சைக்கு தேர்ந்தெடுத்த தரமான நெல்லுதான்
தண்ணீரில் சாய்ந்து முளைக்கும் தொல்லையும் இல்லைதான்
பருவப்பெண்ணைப் போல நாணியே குனிந்து நிற்கும்,
பசியாற உணவு தந்து பத்தாயங்கள் நிறைந்திருக்கும்

(*யாரறி*)

"உணவில் தன்னிறைவு அடைவதோடு,
உபரி நிலையையும் அடைந்து கிராமங்கள்
மறுமலர்ச்சியடைய வேண்டுமானால், ஒரே
வழி விஞ்ஞான வேளாண்மை முறையே"

THE TEN WAYS TO DEVELOP THE ASSOCIATION

By

SAM PITCHAI, B.Sc., Ag.,
Usilampatti Branch Unit

1. Do come to every meeting and that too come at the correct time.

2. Even if the weather does not suit you, make sincere attempts to come. It is easy to give excuses.

3. When you attend a meeting, do not simply find fault with the office bearers and other members, because it will dampen their enthusiasm. Offer constructive criticism.

4. Accept office and assume responsibilities as it is wise and difficult to do things than to destructively criticise.

5. Even if you are not elected or appointed to a committee, do not get sore, but evince keen interest with redoubled vigour and enthusiasm.

6. If asked by the President to give an opinion regarding some important matters, express to him your opinions with sincerity and positive approach.

7. After the meeting, do not go on telling every one, how things should have been done. It will not do good to serve the cause of the Association.

8. Always do more and exceed expectations. Simultaneously appreciate heartily others who work with "girded up loins and mustered might". Never howl that the Association is monopolished by "a few".

9. Do not hold back your dues more than is absolutely necessary. Please remember that many important things are consequentially being delayed by your procrastination. Remit your dues "before time".

10. Always be on the look-out for getting new members. Please do not think that it is the 'funeral' of the office Bearers. After all, they are not idlers and full-time, paid servants of the Association.

நமது சங்கம்

மு. சிவசண்முகம், பி.எஸ்.ஸி. (வேளாண்மை)

மாநில தலைவர்

தோற்றம் :

பரந்து கிடக்கும் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களிலும் பிரிந்து நின்று பணியாற்றும் வேளாண்மைப் பட்டதாரிகளை பாசத்தால் பிணைக்கும் ஒரு மாபெரும் சக்தியாக வேளாண்மை மேல் நிலைப்பணியாளர்கள் சங்கம் 1929-ஆம் ஆண்டு கோவையை தலைமையிடமாகக்கொண்டு தோற்றமெடுத்தது. அன்று முதல் வேளாண்மைப் பட்டதாரிகள் அனைவரும் ஒருங்கிணைந்து தங்களுடைய நலனுக்காகவும் தாய்நாட்டு மக்களுடைய நல்வாழ்வுக்காகவும் அயராது பணியாற்றி வருகிறார்கள்.

குறிக்கோள் :

1. உறுப்பினர்களிடையே ஒருமித்த நட்பு மனப்பான்மையை உருவாக்குதல்.
2. உறுப்பினர்களுக்கு நியாயமான தேவைகளை தேடித்தந்து பாதுகாத்தல்.
3. உறுப்பினர்களின் நல்வாழ்வு, வேலை வாய்ப்பு, ஊதியம் மற்றும் பல நியாயமான தேவைகளை பாதுகாத்தல்.
4. தமிழ்நாட்டிலுள்ள மற்ற சங்கங்களுடன் இதயப் பூர்வமான தொடர்பு கொண்டு பணியாற்றுதல்.

அமைப்பு :

இச் சங்கம் இன்று சென்னையைத் தலைமையிடமாகக்கொண்டு தமிழக முழுவதிலும் 48 கிளைச் சங்கங்களை தன்னகத்தே கொண்டு செயல்பட்டு வருகிறது. இச் சங்கத்தில் மாநிலப் பிரதிநிதிகளாக தலைவர், செயலாளர், இணைச் செயலாளர், பொருளாளர் முதலியவர்களும், ஆராய்ச்சிப் பிரிவில் பணிபுரியும் வேளாண்மைப் பட்டதாரிகளின் சார்பாக மத்தியப் பிரதிநிதி ஒருவரும், சங்கத்தின் தொடர்பு சக்தியாகிய '**செய்திக் கதிர்**' மாத இதழை நடத்தும் பொருட்டு **செய்திக் கதிர்** ஆசிரியர் ஒருவரும், சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை சரிபார்க்க மூன்று தணிக்கையாளர்களும் செயலாற்றுகின்றனர். கிளைச் சங்கத்தின் பிரதிநிதிகளாக துணைத் தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் பணியாற்றுகின்றார்கள். இச் சங்கத்தில் இரண்டாயிரத்து ஐந்நூறு வேளாண்மைப் பட்டதாரிகள் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இச்சங்கத்தின் செயற்குழு மாநிலப் பிரதிநிதிகளையும் கிளைச் சங்கப்பிரதிநிதிகளையும் தன்னகத்தே உறுப்பினர்களாகக் கொண்டு சங்கத்தின் இன்றியமையாத கொள்கைகளையும் திட்டங்களையும் அவற்றைச் செயலாற்றும் வழி முறைகளையும் முடிவெடுக்கும் நோக்கோடு இருமாதங்களுக் கொருமுறை தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கூடுகிறது. சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் பொதுக் குழுவின் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றுகின்றார்கள் பொதுக் குழு வருடம் ஒரு முறை ஏப்ரல் திங்களில் கூடி மாநிலப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் முடிவு செய்கிறது.

ஆற்றிய பணிகளும் அடைந்த வெற்றிகளும் :

வேளாண்மைப் பட்டதாரிகளின் நல்வாழ்வுக்கெனவே இயங்கிவரும் இச் சங்கம் பெரு முயற்சி செய்து முதல் ஊதியக் குழுவின்போது ஓரளவு வெற்றியும் கண்டது. இரண்டாவது ஊதியக் குழுவிலும் ஒரு நபர் குழுவிலும் ஊதிய உயர்வு பெறுவதில் வெற்றி பெற்றிருக்கிறோம். அதோடு மட்டுமல்லாது நாம் நீண்ட நாட்களாக கேட்டுவந்த அரசிதழ் பதிவுற்ற நிலையை வழங்கிய **டாக்டர் கலைஞர்** அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும் நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியுள்ளார்கள். இந்த நேரத்தில் நாம் அவர்களுக்கு நம்முடைய மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்க கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் நாம் அடைய விருக்கும் இன்னும் பல உரிமைகளையும் நமக்கு அளிக்கவிருக்கும் முதலமைச்சர் அவர்களின் கரத்தை வலுப்படுத்த நாம் அயராது பாடுபடுவோம்.

எங்கள் தேவைகள்

1. வேளாண்மை பட்டதாரிகள் முதல் பதவி உயர்வு பெறவே சுமார் 18 வருடங்கள் ஆகின்றபடியால், வேளாண்மை பட்டதாரி களுக்கு தேர்வு நிலே (Selection grade) அளிக்கப்படவேண்டும்.

2. கால்நடை மருத்துவர், பொறியாளர் போன்ற தொழிற் நுட்ப பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் சம்பள விகிதம் அளிக்கப்பட வேண்டும்.

3. ஊராட்சி ஒன்றியத்தில் தற்பொழுது செயல் முறையில் இயங்கிவரும் வேளாண்மை உற்பத்தி பிரிவிற்கு வேளாண்மை பட்டம் பெற்ற வேளாண் அலுவலர்களே முழு பொறுப்பு ஆக்கி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நேரடி பொறுப்பிலிருந்து நீக்கி, அவர்கள் ஊராட்சி ஒன்றிய மன்றத்திற்கும், மாவட்ட வேளாண்மை அலுவலர் களின் நேரடி பொறுப்பிலும் பணிபுரிய ஆணே பிறப்பிக்கவேண்டும்.

4. வேளாண்மை பட்டதாரிகளுக்கு நிரந்தர பயணப்படி ரூ. 75 அளிக்கப்பட வேண்டும்.

5. எல்லா அரசு விதைப் பண்ணேகளிலும் தனிப்பட்ட மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் நியமிக்கப்படவேண்டும்.

6. வேளாண்மைத் துறையில் பணிபுரியும் வேளாண்மை பட்டதாரிகள் உழவர் பெருமக்களுக்கு, அலுவலக நேரத்தை தவிர விஞ்ஞான ரீதியான ஆலோசனேகளே இலவசமாக வழங்குவதற்காக வட்ட தலேமையிடத்திலும், மாவட்ட தலேமையிடத்திலும், மாநில தலேநகரிலும் இலவச விஞ்ஞான ஆலோசனே நிலேயங்கள் (Free Consultation Service Centre) அமைக்க இலவசமனே வழங்கவேண்டும்.

7. வேளாண்மை சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களிலும், அரசுடை யாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கி, கூட்டுறவு சர்க்கரை ஆலே மற்றும் விவசாய வருமான வரி அலுவலகங்களிலும் வேளாண்மை பட்டதாரிகளே நியமணம் செய்தல்.

12—5—73 திருச்சியில் நடந்த பொதுக் குழு கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம்.

வளம் கொஞ்சும் தமிழகத்தில் வறுமையில்லை என்று கூறும் விதத்தில், பல பசுமைபுரட்சித் திட்டங்களை வெற்றிகரமாக நடாத்தி சென்றதின் மூலம் —தமிழ்நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்று, உபரி மாநிலமாக திகழ்வது போல், பருப்பு வகைகள், மற்றும் எண்ணெய் வித்து பெருக்கம் ஆகியவற்றிலும் தன்னிறைவு பெற்று உபரி மாநிலமாக திகழ தமிழகத்தில் பரந்து பணிபுரியும் வேளாண்மை பட்டதாரிகள் அனைவரும் கடமையுணர்வுடன் கூடிய உண்மையான ஒத்துழைப்பை தமிழக அரசுக்கு நல்கிட வேண்டும் என்ற தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

25-1-73 அன்று

தஞ்சையில் நடந்த

பாராட்டு விழாவில்

மாண்புமிகு வேளாண்மைத்துறை

அமைச்சர் அவர்கள்

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்
விழாவிற்கு வருகை தருதல்.



விழாவில் இன்னாள் மாநிலத் தலைவர் மு. சிவசண்முகம்
வரவேற்பு உரையாற்றுதல்.

பாராட்டு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. நடராசன் அவர்கள் உரையாற்றுகிருர்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டு இதழ் வாசித்தளித்தல்.

தஞ்சையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை

மதிப்பிற்குரிய விழாத் தலைவர் மாநில வேளாண்மை பட்டதாரி சங்கத்தின் தலைவர் அவர்களே! நம்முடைய வேளாண் துறை கூட்டு இயக்குநர் அவர்களே! இங்கு வருகை தந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் நடராசன் அவர்களே! ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மதிப்பிற்குரிய சகோதரர் தங்கமுத்து அவர்களே! திருவையாறு ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மதிப்பிற்குரிய சோழகர் அவர்களே! தஞ்சை நகராட்சி மன்றத்தலைவர் எங்களுடைய மதிப்பிற்குரிய தலைவர் திரு. பெத்தண்ணன் அவர்களே! துணைத்தலைவர் திரு. சுல்தான் அவர்களே! நகராட்சி மன்ற உறுப்பினர்களே! ஊராட்சி மன்றத் தலைவர்களே! என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த அருமை சகோதரர்களே! நண்பர்களே!

இன்றைய தினம் உங்களாலே அளிக்கப்படுகின்ற இந்த வரவேற்பை உங்களிலே ஒருவன் என்ற முறையில் ஏற்றுக்கொள்வதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களுக்கும் எனக்கும் இருக்கின்ற உறவைப் பற்றி, இங்கே நம்முடைய கூட்டு இயக்குநர் அவர்களும், தலைவர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இது எனக்கு ஏற்பட்டதல்ல, எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கி இந்த அவையின் முன்னாலே உங்களாலே பாராட்டப்படுகின்ற அளவுக்கு ஆளாக்கி விட்டுச்சென்று இன்றைய தினம் வங்கக் கடற்கரையோரம் துயில் கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்கள் எங்களை வளர்த்தப் பண்பு அது. அவர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடனேயே அரசாங்கத்திலிருக்கின்ற செயலகத்தில் பணியாற்றுகின்ற அனைவரையும் அழைத்து, "அன்புள்ள நண்பர்களே" என்றுதான் சொன்னார்கள். இது சரித்திரத்திலேயே முதல் வார்த்தை என்பதை அன்றைய தினம் செயலாளராக இருந்த திரு. ராமகிருட்டிணன் அவர்கள் பல இடங்களிலே சொன்னார்கள், "எங்களை இதுவரையிலே வேலைக்காரர்களாகத்தான் சிலர் கருதிக்கொண்டு வந்தார்கள், ஆனால் அண்ணா அவர்கள்தான் எங்களை நண்பர்கள் என்று சொன்னார்கள்" என்று பெருமையோடு சொன்னார்கள். அந்தப்புத்தி எங்களுக்கு இன்றும் இருக்கும் என்றும் இருக்கும்.

இந்த வரவேற்புரையில் நண்பர்கள் பலர் புகழபட எழுதியிருந்தாலும் அதைப் படித்த நண்பர் கணேசன் அவர்கள் சுவையேற்றிப் படித்தது எதிரிலே உட்கார்ந்திருக்கின்ற நீங்களெல்லாம் சுவையாக உணவைப் பருகுவதை விட அதையே பருகி விடலாமா என்று நீங்கள் ஆரவாரத்தோடு இருந்ததை நான் கண்டேன். இவ்வளவு சிறப்பான விருந்து இங்கே அளித்திருக்கிறது என்று சொன்னால், இந்த வரவேற்பு அளித்திருக்கின்றீர்கள் என்று சொன்னால், எங்களை ஆளாக்கி வளர்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல இது அடுத்து எதற்கும் அச்சாரமாகவும் இருக்கக்கூடும் என்பதை நான் உணருகிறேன். "தம்பி விருந்துக்குப் பின், சுவையான விருந்து, கொஞ்சம் காரமும் இருக்கும் விருந்தை ருசிப்பது போல, சுவையை ருசிப்பது போல காரத்தையும் ருசியுங்கள்" என்பதைத்தான் சொல்லிச் சென்றார்கள். எனவே இன்றைய தினம் நீங்கள் எப்படி உணவை வைத்துக்கொண்டு சாப்பிடுவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றீர்களோ அதுபோல பல கோரிக்கைகளும் உங்களிடத்திலே இருக்கலாம். ஆனால் நம்மிலே ஒருவனாக இருக்கின்ற காரணத்தால் உங்களுக்கே உரிய, பட்டதாரிக்கே உரிய பண்பாட்டோடு சொல்லவேண்டிய இடத்தில், சொல்லவேண்டிய நேரத்தில், சொல்லவேண்டிய முறைப்படி சொல்ல வேண்டுமே தவிர, வரவேற்பிலே விருந்திலே மருந்து என்பது போல இது கலக்கக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் இதை விட்டு விட்டீர்கள் என்று

நான் கருதுகின்றேன். இருந்தாலும் ஓரளவு உங்களுடைய குறைபாடுகள் தெரிந்திருக்கின்ற காரணத்தால், அந்தக் குறைபாடுகளை எப்படிக் களைவது என்று இதுவரை எங்களது தலைவராக முதலமைச்சராகப் பெற்றிருக் கின்ற காரணத்தால் அதை நிச்சயமாக நீங்கள் என்னிடத்தில் சொல்ல வேண்டிய முறைப்படி சொன்னதைப் போல நான் அவரிடத்தில் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லி நிச்சயமாக அதை முடித்துக் கொடுக்கமுடியும் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் நம்முடைய முத லமைச்சர் அவர்கள் இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு ஒரு தடவை குறிப்பிட்டார்கள் "அதிகாரிகள் என்பவர்கள் ஏதோ ஒரு தனியினமாகக் கருதுகின்றார்கள். இன்றைய தினம் பட்டதாரிகளாக இருப்பவர் களும் உத்தியோகத்திலே இருப்பவர்களுடைய வீட்டிலே இருப்பவர்களும் என்னதான் இவர் இந்த வீட்டிலே பட்டதாரியே தவிர நம்மைப் போல மிகச் சாதாரணக் குடும்பம்தான் அங் கேயும் இருக்கின்றது. அந்தக் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு பணியாற்றுபவர் இடத்திலே இருக்கின்றது. இவர்கள் பணி யாற்றி இந்தக் குடும்பத்தைக் காக்கவேண்டும் என்பதற்காக அவர்களுடைய பெற்றோரெல் லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு இருப்பார்கள்." அந்த குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பே இவர்களிடத்தில்தான் ஒப் படைக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்து பலமுறைப் பேசியிருக்கின்றார்கள், பலவற்றை சொல்லியிருக்கின்றார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கின்றது நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மதிப்பிற் குரிய பக்தவச்சலம் அவர்கள் என்னிடத்திலே உரையாடிக் கொண்டிருந்தபோது ஒரு சமயம் குறிப்பிட்டார்கள். அப்போது அவர்களுக்கும் எங்களுக்கும் உறவு இருந்த நேரம் அவர் சொன்ன வார்த்தை, அவர்கள் இதே வார்த் தையைச் சொன்னார்கள். "கலைஞர் அவர்கள் எந்த முடிவும்பற்றி நல்ல முடிவு எடுக்கிறார், சீக்கிரமாக முடிவு எடுக்கிறார் நல்லமுறையில் செயலாற்றுகிறார், நிறைவேற்றுகிறார், ஆனால் ஒரே ஒரு தவறைத்தான் இப்போது செய்து விட்டார்" என்று அவர் சொன்னார். என்ன என்று கேட்டேன் "இருபதாண்டு காலம் எங்களுக்குத் தெரியாதது என்று எண்ணிக் கொண்டு நாங்கள் சிலவற்றைச் செய்யாமல் இருந்தோம். கலைஞர் அவர்கள் இப்படித் திடீ ரென்று ஒரு இருபத்தைந்து கோடி ரூபாயை அதிகாரிக்குச் சம்பளமாக உயர்த்தி இருக் கின்றாரே, இது அவ்வளவு சரியல்ல. எங்களுக் கெல்லாம் தெரியாதா, ஏதோ கேட்க கேட்க அஞ்சோ, பத்தாவது கொடுக்கவேண்டும். இப்படித் திடீரென்று கொடுத்திருக்கிறாரே இத னால் எவ்வளவு சிக்கல் ஏற்படப்போகிற தென்று அவருக்குத் தெரியாது. அவர் இன் னும் நிர்வாகத்திலே அடிபடவேண்டும் என்று என்னிடத்திலே சொன்னார்கள்". நான் அவ ரிடத்திலே சொன்னேன் "எதையும் ஏதோ முடிந்த அளவில் செய்தால் செய்து பார்ப் போம் இல்லாவிட்டால் போனால் போகிறது என்று விட்டுவிட்டுப் போய்விடலாம் என்று கூட முதலமைச்சர் சொன்னார். நாம் இருக்கிற காலத்தில் செய்யவேண்டியதை செய்து விடு வோம் என்று அவரிடத்தில் சொன்னேன். "போக போகத் தெரியுங்க அன்பில் போய் பாருங்க" என்று சொன்னார்கள், நாங்கள் குறிப்பிடுவதற்குக் காரணம் யாரையும் குறை கூறுவதற்கல்ல. இன்றையதினம் சிறப்பாக வரவேற்பளித்திருக்கின்றீர்கள். நான் ஒரு தடவை 1954-ஆம் ஆண்டு நான் மாவட்ட உறுப்பினராக இருந்தபோது, மாவட்ட மன் றத்தில் பெரிய பிரச்சினையாக இருந்தது. ஆசிரியர்கள் மாற்றத்தைப்பற்றி அன்றைய தினம் நான் பேசுகின்றபோது சொன்னேன் ஒரு ஆசிரியர் நினைத்தால் நாளையதினம் ஒரு மன்ற உறுப்பினராக வந்துவிடமுடியும், ஒரு மன்ற உறுப்பினர் நினைத்தால் ஆசிரியராக வர முடியாது. ஏனென்றால் அதற்குச் சில தகுதி யெல்லாம் அடிப்படையாக இருக்கின்றது. செகண்டரி கிரேடுக்கு எஸ். எஸ். எல். சி. படிக்கவேண்டும். இரண்டாண்டு பயிற்சி பெற வேண்டும், அல்லது ஹையர் கிரேடுக்கு இன்ன வகுப்பு படிக்கவேண்டும், பின்னர் பயிற்சி பெறவேண்டும் என்றெல்லாம் நான் அவர்க ளிடத்திலே சொன்னேன். உடனே அவ் விடத்திலிருந்த அங்கத்தினருக்கெல்லாம் கோபம் வந்து, அங்கத்தினர் இதை வாபஸ் வாங்கவேண்டும், உரிமையை பாதிக்கிறது என் றெல்லாம் சொன்னார்கள். பரவாயில்லை என்று சொல்லிவிட்டு நான் ஒரு ஆசிரியரையே அவரைப் பதவி விலகச் செய்து அவரையே மாவட்ட மன்ற உறுப்பினராகக் கொண்டு

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கு சங்க இன்னாள் மாநில தலைவர் மு. சிவசண்முகம் பாராட்டு பேழை அளித்தல்.



விழாவில் கூடுதல் வேளாண்மை இயக்குநர் திரு. வெங்கட்டராமன் உரையாற்றுகிறார்.



↑

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் உரை ஆற்றுதல்.

↓



வந்தோம். அந்த காரணத்தாலே நாங்கள் எப்பொழுதுமே இப்படியெல்லாம் அவர்களும் நம்மவர்கள் என்று எண்ணியதுண்டு ஆனால் சமீபகாலத்தில் துர்ப்பாக்கிய வசமாக இந்த அரசாங்கத்திடத்திலே வாதாடி பெறவேண்டியதைவிட ஒரு சிலர் போராடித்தான் பெற வேண்டும் என்ற நிலையில் தாங்கள் மிஞ்சியவர்கள் என்ற எண்ணத்தக்க நிலைமை தமிழகத்தில் உருவாகிக்கொண்டு வருகின்றது. நான் நம்பவர்களைப்பற்றிச் சொல்லவில்லை. அப்படி ஒன்று உருவாகிக்கொண்டு வருகின்றது. அது எங்கே கொண்டுபோய் எதிலே முடியும் என்ற அச்சம் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், நூற்றைக்கெடுக்குமாம் குருணின்னு நம்மிடத்தில் பழமொழி இருக்கின்றது. நூறு கலம் நெல்லை வார்த்து குருணி உமியைக் கலந்தடித்தால் அந்த உமியும் பதரும்தான் முன்னால் வந்து நிற்கும், அதைப்போல இன்றைய தினம் தமிகழத்திலே இருக்கும் பிறரெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் சிலர் சர்ச்சைகள் கிளப்பிக்கொண்டிருக்கின்றார்கள். இருந்தாலும் எங்களை அதாவது நம்மைப் பொறுத்தவரையில் நான் அன்றாடம் அடிக்கடி சொல்வதுபோல ஏழை எளிய விவசாயிகளோடு பழகுபவர்கள் நம்மவர்கள். நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களிடத்திலே சொல்லுகின்ற பொழுது நான் அவரிடத்திலே ஒன்றே ஒன்றுதான் சொன்னேன். மற்ற அதிகாரிகள் பழகுவதற்கும் எங்களுடைய அதிகாரிகள் பழகுவதற்கும் வித்தியாசம், மற்ற அதிகாரிகள் எங்கெங்கோ பழகுகிறார்கள், ஆனால் எங்களது அதிகாரிகள் அவர்கள் போய் இருக்கின்ற இடமெல்லாம் சேரிகளாகவும், அவர்கள் பழகுகின்றவர்களெல்லாம் அதிக அளவு கல்வி அறிவு பெறாதவர்களாகவும் இருக்கின்றார்கள். பயிர் விளைச்சலை மட்டும் அவர்கள் செய்யவில்லை, அதே நேரத்தில் அவர்களையும் நல்ல பண்புள்ளவர்களாக வளர்க்கின்றார்கள். பயிர் வளர்ப்பதைப் போலவே அவர்களுடைய உயிரையும் வளர்க்கின்றார்கள் என்பதையெல்லாம் அவர்களிடத்தில் எடுத்து வாதாடிய நேரத்தில் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு இன்னும் சில பிரச்சினைகள்கூட இப்போது வந்துகொண்டிருக்கின்றது, இருந்தாலும் கூட தமிழ்நாட்டிலே வேளாண்மைத்துறையைச் சேர்ந்தவர்கள், நமது அருமை சகோதரர் திரு. நடராசன் குறிப்பிட்டது போல நான் உங்களிலே ஒருவனாக இருக்கின்ற காரணத்தாலே, பல வகையில் நீங்கள் ஒத்துழைக்கின்றீர்கள் என்று உங்களையெல்லாம் நான் பாராட்டுகின்றேன். உங்களுடைய முயற்சி மேலும் வெல்கவேண்டும். இப்பொழுது பாராட்டி இருப்பதைப் போலவே உங்களுடைய பாராட்டுக்குரியவனாக நடப்பதற்கு என்றும் முயற்சி செய்வேன் என்று உறுதியைக் கூறி உங்களாலே அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

நன்றி நல்கிடுவோம்........

“ நன்றி சொல் வேண்டாவோ ? நல்லுழைப்பில் நாளெல்லாம்,
ஒன்றி விடும் நம் தலைவருக்கே !—என்றுமிங்கே
தெள்ளமுதே இந் நன்நாளில் நாமந்த
நல்லவரை வாழ்த்திடுவோம் நன்று.

அழகின் சிரிப்பு இதோ மலர்கிறது....

குரு. அரங்கநாதன்
நாகைக்கோட்டம் கிளைச்சங்கம்

காலைத் துயில்மீண்டு, காரிருளின் பகைமீண்டு,
ஓலைக் குடிசையதன் உட்கதவின் தாள்மீண்டு,
வாலைக் குமரியவள் வைகறையின் சாயலிலே,
சேலைதனை முடிந்து சாலையிலே வந்துநின்றாள்.

கண்ணில் ஒளியேந்தி, கைவளையல் ஒலியேந்தி,
மண்ணில் புகழேந்தி, மார்பகத்தில் பொன்னேந்தி,
கையில் குடமேந்தி, கால்களிலே அழகேந்தி,
தையல் அவளிங்கே தன்பார்வை ஓட்டுகிறாள்.

பார்வை படிந்தோட, பனிப்படலம் விரைந்தோட,
கோர்த்த முத்துக்கள் குமிழ்சிரிப்பில் இழையோட,
வார்த்த சிலையழகு வஞ்சியிடம் பணிந்தாட,
சேர்த்த முல்லையெனச் சிரிக்கின்றாள் பெண்ணழகு.

பொன்னி சிரிப்போ! பூரித்த புன்சிரிப்போ!
கன்னியவள் சிரிப்பு கண்ணகி கதிர்சிரிப்போ,
பின்னிப் பிணைந்துவரும் காதல் தனிச்சிரிப்போ!
பின்னர் வருநாளை எண்ணும் மகிழ்சிரிப்போ!

தமிழே உருவாக, தனிக்கருணை விழியாக,
தஞ்சைத் தரணியதன் நஞ்சையினை உடலாக,
தனவந்தர் சூழவரும் திருச்சியினை முகமாக,
தனிப்பெருமை சூடிவரும் கோவையினை இதழாக,

ஆற்காடு இரண்டினையும் அழகிய காலாக,
ஏற்காடு உதகையினை இருகொங்கை உருவாக,
ஏற்றமிகு மதுரையினை இணையில்லாக் கையாக,
ஆற்றல் திருநெல்லை அழகியநல் நுதலாக,

சேலத்து நீலம் நடுசாலை கன்னமென,
செங்குமரி நாடதனை நெற்றித் திலகமென,
இராமநாதபுரம் அணிகலனாய் ஆடிவர,
இன்பத் தமிழ்ச்செங்கை மூக்குத்தி அழகுடவே,

தமிழரசி வாழுகிறாள்! தனிப்பெருமை சூடுகிறாள்!
தமிழகத்து ஒளிவிளக்காய் தரணியெலாம் போற்றிடவே
தன்னிறைவு என்பதனை தன்னகத்தே வடிவாக்கி
தமிழாக பாடுகிறாள்! தமிழ் மண்ணாய் ஆடுகிறாள்!



விழாவில் கலந்துகொண்ட சட்டமன்ற உறுப்பினர்
நகராட்சி, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள்.

விழாவில் கலந்துகொண்ட சங்க உறுப்பினர்கள்.



விருந்தில் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களும், பெருந் தலைவர்களும்.

விழாவில் சங்க இணைச் செயலாளர் திரு. வ. பழனியப்பன் நன்றி கூறுதல்.

தமிழகத்தில் தன்னிறைவு

R. மாணிக்கம், பி.எஸ்.ஸி. (வே)
உறுப்பினர், சென்னை கிளைச்சங்கம்

பருவமழை எப்போது பெய்யும், அடுத்த அறுவடைக்கு எத்தனை திங்கள் காத்திருக்க வேண்டும் என்றெல்லாம் வாடித்தவித்த தமிழ் மக்கள் இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று எண்ணும்போதே அவர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அவர்கள் உள்ளம் உவகையில் களிக்கிறது. தமிழ்நாட்டில் வாழ்கின்ற நாலரைக் கோடி தமிழர் களின் நல்லெண்ணத்தையும் முழு ஆதரவையும் பெற்று கழக அரசு 1967-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் செயல்படத் தொடங்கியது. கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில் தமிழ் நாட்டின் உணவுக் கிடங்குகளில் 500 டன் அரிசிதான் இருப்பு இருந்தது.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து பசுமைப்புரட்சித் திட்டம், தீவிர சாகுபடித் திட்டம், உயர் விளைச்சல் திட்டம், பல பயிர்த் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டம் ஆகிய திட்டங்கள் வேளாண்மைப் பட்டதாரிகளின் உதவியைக்கொண்டு வெற்றி பெற வழி வகுத்தார். 57.31 லட்சம் டன்கள் உணவு உற்பத்தி செய்த தமிழ்நாடு இன்று 73 லட்சம் டன்களாக உணவு உற்பத்தியைப் பெருக்கி யிருப்பதே இதற்கு தக்கதோர் சான்று. இதற்குக் காரணம் வேளாண்மைப் பட்டதாரிகளின் அயராத உழைப்பும் தமிழக அரசு உணவு உற்பத்தியில் காட்டிய ஈடுபாடுமே காரணம் எனில் அது மிகையாகாது.

1969-ம் ஆண்டு இயற்கையின் கொடுமையால் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. இருந் தாலும் அடுத்த ஒரு வருடத்துக்குள்ளாக தமிழகம் அரிசி உற்பத்தியில் தேவைக்குமேல் 1.3 லட்சம் டன்கள் உற்பத்தி செய்து உபரி மாநிலமாக வெற்றி நடைபோட்டது. வேளாண்மைத் துறை உழவர் பெருமக்களுக்கு கருணை, காவேரி, காஞ்சி, பொன்னி, ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 முதலிய உயர்விளைச்சல் நெல் ரகங்களை அளித்தும் அவ்வகைளை பயிரிடும் முறைகளையும் விளக்கியும் அவர்களுடைய துயர் துடைக்கும் பணியினை செவ்வனே செயலாற்றியது. பத்தாண்டுகளுக்கு முன்பு 39 லட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி இன்று 53 லட்சம் டன்னாக உயர்த்தப்பட்டதும் உயர் விளைச்சல் நெல் ரகங்கள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 69-70-ல் 28 லட்சம் ஏக்கர்களாக இருந்து இன்று 55 லட்சம் ஏக்கர்களாக உயர்த்தப்பட்டதுமே இதற்கோர் சான்றாகும்.

மேலும் தமிழகத்தின் திட்டக் குழுவின் அறிவுரையின்படி 1973-74-ம் ஆண்டுக்குள்ளாக 33.5 லட்சம் ஏக்கர் நிலத்தில் அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்களை பயிரிட வேண்டுமென்றும், அதிக மகசூல் தரும் சிறுதானியப் பயிர்களை 2·5 லட்சம் ஏக்கரில் பயிரிடவேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தமிழகத்தில் நான்காவது ஐந்தாண்டு திட்ட இரண்டாவது வருடத்திலேயே (1970-71) அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்கள் 44.93 லட்சம் ஏக்கரிலும், அதிக விளைச்சல் தரும் சிறு தானியப் பயிர்கள் 2.85 லட்சம் ஏக்கரிலும் பயிரிடப்பட்டு ஏனைய மாநிலங் களுக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாட்டில் வேளாண்மையில் ஈடுபட்டு இருக்கின்ற உழவர்களின் எண்ணங்கள் பல தரப்பட்டவை. வேளாண்மையில் பழமையை செயல்படுத்துவோர் பலரும், புதுமையைப் புகுத்தவேண்டும் என்று சிலரும்தான் இருந்தார்கள். உரத்தின் முக்கியத்துவம், பலவகையான பயிர்களுக்கும் இடவேண்டிய உரத்தின் அளவு, இடவேண்டிய வழிமுறைகள் ஆகியவை

வேளாண்மை பெருங்குடி மக்களுக்கு நன்குணர்த்தப்பட்டு உரம் வேண்டாம் என்ற நிலை மாறி உரம் போதவில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. 1947-48-ஆம் ஆண்டு கூட்டு சென்னை மாநிலத்தில் தழைச்சத்து 5858.4 டன்களே உழவர்களால் விரும்பி வேண்டப்பட்டது. ஆனால் 1971-72-ல் 1,95,000 டன்கள் தழைச்சத்து உரமும், 68,000 டன்கள் மணிச்சத்து உரமும், 58000 டன்கள் சாம்பல் சத்து உரமும் தமிழக உழவர்களால் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழக உழவர்கள் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதில் எந்த அளவுக்கு முன்னேறி யிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

தமிழகத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பு பயறு வகைகள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு மிகவும் குறைந்த அளவே இருந்தது. 1970-71-ம் ஆண்டு 4·55 லட்சம் ஹெக்டரில் பயிரிடப் பட்டது. இதன் மூலம் தமிழகத்தில் 1960-61-லிருந்து 1970-71 முடிய ஆண்டு தோறும் 0.7 சத விகிதமே மொத்த உற்பத்தி பெருகியுள்ளது. இருந்தாலும் 1969-70, 70-71 ஆண்டுகளில் பயறு வகைகள் பயிரிடப்படும் நிலப்பரப்பு கூடுதலாக்கப்பட்டதால்தான் மொத்த உற்பத்தியில் ஆண்டுக்கு 0.9 சதவீதம் குறுகிய கால பயறு வகைகளை பயிரிடுவதன் மூலமும், நெல் அறுவடைக் குப்பின் தரிசுகளில் பயிரிடுவதன் மூலமாகவும், கலவைப் பயிராக பயிரிடுவதன் மூலமாகவும் உற்பத்தி பெருகியுள்ளது. பயறு வகைகளின் உற்பத்தியை மேலும் பெருக்க தமிழ்நாடு அரசு பலவகைத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தில் இன்று மஞ்சள் புரட்சி என்ற திட்டத்தின்கீழ் சூரியகாந்தி பயிரிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் எண்ணெய்ப் பற்றாக்குறையைப் போக்க நடப்பு ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் இரண்டு லட்சம் ஏக்கரில் சூரியகாந்தி பயிரிட ஒரு மாபெரும் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்படி ஐம்பதாயிரம் டன்கள் சூரியகாந்தி விதை உற்பத்தியும் சுமார் பத்துகோடி ரூபாய் மதிப்புள்ள 15 ஆயிரம் டன்கள் சூரியகாந்தி எண்ணெயும், 35 ஆயிரம் டன்கள் புண்ணாக்கும் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இதற்கு முன்னோடியாக தமிழகத்தின் பலபகுதிகளில் சூரியகாந்தி பயிரிட்டு வேளாண்மை பெருங்குடி மக்களுக்கு செயல் முறையாகக்காட்டி வெற்றி கண்டிருக்கின்றோம்.

தமிழகத்தில் 1950-51-ல் இருந்ததைவிட இன்று அரிசி உற்பத்தி 3 மடங்காகவும், கரும்பு உற்பத்தி $3\frac{1}{2}$ மடங்காகவும், பருத்தி உற்பத்தி $1\frac{1}{2}$ மடங்காகவும், பருப்பு உற்பத்தி 2 மடங்காகவும் பெருகியுள்ளது.

இன்று தமிழகத்தில் உணவு உற்பத்தி 73 லட்சம் டன்னாக இருப்பதை தமிழக அரசின் திட்டத்தின்படி 1978-79-ம் ஆண்டில் 95.77 லட்சம் டன்னாகவும் 1983-84-ம் ஆண்டில் 111.5 லட்சம் டன்னாக உற்பத்தி செய்வதற்கு தமிழகம் முழுவதும் பல ஆக்கப் பணிகளில் ஈடுபட் டிருக்கும் வேளாண்மைப் பட்டதாரிகள் கடமை உணர்வுடன் கூடிய உணர்ச்சியுடனும், எழுச்சி யுடனும் திட்டங்களையும் உழவர்களையும் அணுகி திட்டங்கள் வெற்றிபெற பாடுபடுவோம்.

உயர் விளைச்சல் ரகங்களில் புரத சத்து......

ஐ. ஆர். 8	9.4 சதம்
ஆடுதுறை 27	11.3 சதம்
சி. எஸ். எச். 1 சோளம்	13.1 சதம்
சி. எஸ். எச். 2 சோளம்	12.9 சதம்
எச். பி. 1 கம்பு	14.9 சதம்
எச். பி. 3 கம்பு	15.35 சதம்
எச். பி. 4 கம்பு	13.53 சதம்

உழவர் வாழ்வில் ஒளி ஊட்டும் சூரியகாந்தி

வே. மீனுட்சிசுந்தரம், பி.எஸ்.ஸி. (வேளாண்மை)

உறுப்பினர் : சென்னைக் கிளைச்சங்கம்

"சூரியகாந்தி" என்ற பெயர் அழகான மலரையே நமக்கு நினைவூட்டுகிறது. மலர் மட்டுமல்ல, நல்ல மணமுள்ள சிறந்த எண்ணெய் அளிக்கக்கூடிய ஒரு எண்ணெய்வித்துப் பயிர் என்பது சமீபகாலத்தில் நாம் அறிந்த உண்மை. புதுமையை வரவேற்கும் தமிழக உழவர்களுக்கு சூரியகாந்தி ஒரு வரப்பிரசாதமென்றே கூறலாம்.

நமது அன்றாடத் தேவைக்கு முக்கியமானது தாவர எண்ணெய். இதற்காக நாம் பெரிதும் நம்பியிருப்பது நிலக்கடலைதான். தமிழ்நாட்டில் நிலக்கடலை சுமார் 25 லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்படுகிறது. நிலக்கடலை உற்பத்தியை பெருக்க அதிதீவிர சாகுபடித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நான்காம் ஐந்தாண்டு திட்டகாலத்தில் எண்ணை வித்துக்களின் உற்பத்தியை 10 லட்சம் டன்களிலிருந்து 14 லட்சம் டன்களாக பெருக்க அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனல் எண்ணெய் வித்துக்கள் உற்பத்திக்கு நிலக்கடலையைத்தான் நம்பியிருக்க வேண்டுமா? என்ற கேள்வி இதன் சாகுபடி பற்றிய கருத்துக்களை ஆராயத்தூண்டின. மற்ற எந்தப் பயிருக்கும் இல்லாத ஒரு அளவில் நிலக்கடலை சாகுபடிக்கு அதிக அளவு விதையளவு பயன்படுத்தப்படுகிறது. அதற்கு ஆகும் செலவு அதிகம். பருவமழை தவறினல் நிலக்கடலைபயிர் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பூச்சிகளின் தொல்லைகளை ஒழிக்க முக்கியமாக சிகப்புக் கம்பளிப் பூச்சியைப் போக்க பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் நம் தாவர எண்ணெய்த் தேவையை பூர்த்தி செய்வது எப்படி? நாள்தோறும் பெருகிவரும் மக்கட் தொகைக்கு இதைப் பகிர்ந்து அளிக்க இயலுமா? மலிவான விலையில் மக்களுக்கு வழங்க இயலுமா என்ற பல பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளியாகத் தோன்றியது சூரியகாந்தி. தமிழ்நாடு வேளாண் துறையினர் மேற்கண்ட ஆராய்ச்சியின் முடிவுகளால் உழவர்கள் வாழ்வை மலரவைக்க மலர்ந்தது சூரியகாந்தி.

எண்ணெய் வித்துக்கள் பெருக்கத்திற்காக மேற்கொண்ட பரிசோதனைகளில் சூரியகாந்தி சிறந்த எண்ணெய் வித்துப் பயிராக விளங்கியது. தமிழ்நாட்டிற்கு ஏற்ற ரகங்களைத் தேர்ந்தெடுக்க சூரியகாந்தி சம்பந்தமான ஆராய்ச்சி கோவில்பட்டியிலுள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பயனுக இ.சி. 68414 என்ற ரகம் தேர்ந்தெடுக்கப்பட்டு கே. 1 என்று சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ரகம் புதியதாக மட்டுமல்லாமல் சாகுபடியில் புதுமையையும் உடையதாகயுள்ளது. குறுகிய காலத்தில் 85 முதல் 90 நாட்களில் பலன் தருகிறது. அதனுல் பன்முறை சாகுபடிக்கும் ஏற்றது. நிலக்கடலை பயிரிட இயலாத எல்லா நிலங்களிலும் பயிரிடலாம். வறட்சியை தாங்தக் கூடியது. நிலக்கடலைக்குத் தேவையானதுபோல் வளர்ச்சி காலத்தில் சூரியகாந்திக்கு ஈரம் தேவையில்லை. ஒரு ஏக்கருக்குத் தேவையான 4 முதல் 5 கிலோ சூரியகாந்தி விதைக்கு சுமார் ரூ. 6 முதல் ரூ. 8 வரை செலவாகும். ஆனல் 50 முதல் 55 கிலோ விதைப் பருப்புகளை நிலக்கடலை சாகுபடியில் விதைக்கும் போது சுமார் ரூ. 125 வரை நிலக்கடலை விதைக்காகச் செலவிட வேண்டியுள்ளது. பூச்சி, பூசணங்களின் தொல்லைகளும் குறைவு.

இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட சூரியகாந்தி தமிழ்நாட்டிற்கு பரவலான சாகுபடிக்கு உகந்ததுதான் என்று அறியும் பொருட்டு மாநில அரசு மத்திய அரசின் உதவியுடன் முன்னேடி மாதிரி நிருபணப்பாத்திகள் அமைத்தது. இவையே உழவர்களுக்கு

விளக்கப் பாத்திக்களாக அமைந்தன. 1971-72ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் 200 நிருபணைப் பாத்திகள் சுமார் 880 ஹெக்டாரில் உழவர்கள் வயலிலேயே போடப்பட்டன. இந்த நிருபணைப் பாத்திகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 300 அரசு மானியமாக வழங்கியது. இதன் முடிவுகள் நல்ல பலனை அளித்ததால் உழவர்கள் தாமாகவே சூரியகாந்தி சாகுபடியை மேற்கொள்ள முன் வந்தனர்.

குறுகிய காலத்தில் மானாவாரி சாகுபடியில் ஏக்கருக்கு ரூ. 200 சாகுபடிச் செலவு போக நிகரமாக ரூ. 250 பெற முடியும். இறவைப் பயிரில் சாகுபடிச் செலவு ரூ. 400 போக நிகர லாபமாக ரூ. 500 பெறலாம். மானாவாரிப் பயிர் ஏக்கருக்கு 300 கிலோ வரையிலும், இறவைப் பயிர் 600 கிலோ வரையிலும் மகசூல் தரவல்லது.

1972-73ம் ஆண்டு தமிழ்நாடு இரண்டு லட்சம் ஏக்கர் பரப்பில் சூரியகாந்தி சாகுபடி செய்ய சூரியகாந்தி அபிவிருத்தித் திட்டமொன்றை துவக்கியுள்ளது. இதன் மூலம் சுமார் 50 ஆயிரம் டன்களுக்கு மேல் சூரியகாந்தி விதை உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 10 கோடி மதிப்புள்ள எண்ணெயும், பிண்ணாக்கும் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு விதை, விதை நேர்த்தி மருந்து சாகுபடிக் குறிப்புகள் அடங்கிய ரூ. 11 மதிப்புள்ள ஒரு 'மினிகிட்' இலவசமாக வழங்கப்படுகிறது. சாகுபடிக் கடனை ஏக்கருக்கு ரூ. 60 வீதம் கூட்டுறவு சங்கங்களும் நிலவள வங்கிகளும் வழங்க வசதி செய்யப்பட்டுள்ளது.

1973-74ம் ஆண்டு 3.75 லட்சம் ஏக்கர்களுக்கு இத் திட்டம் விஸ்தரிக்கப்படும். 500 நிருபணைப் பாத்திகளும் அமைக்கப்படும்.

மகசூலோடு நின்றுவிடாமல் மருத்துவத்திற்கும் பயன்படுவதாக உள்ளது சூரிய காந்தி எண்ணெய்.

கொழுப்புச்சத்து குறைந்த சூரியகாந்தி எண்ணெய் இரத்த அழுத்தம், நீரழிவு, இருதய நோய் முதலியவற்றால் வருந்துபவர்களுக்கு நல்ல பலனளிக்கிறது. சூரியகாந்தி பிண்ணாக்கில் 36 சதம் புரதச்சத்து உள்ளதால் கால்நடைகளுக்கு ஏற்ற ஊட்டம் நிறைந்த தீவனமாகும். பிற எண்ணெய்களைப் போல் சமையலுக்கு பயன்படுத்த ஏற்றது. புதிய பொருளாயிற்றே உரிய விலை கிடைக்குமா என உழவர்கள் கவலைப்படவேண்டாம். கூட்டுறவு சங்கங்களும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் சூரியகாந்தி விதைகளை வாங்கிக்கொள்ளும், தவிர வனஸ்பதி உற்பத்தியாளர்களும் பெருமளவு பெற்றுக்கொள்ள தயாராக இருக்கின்றனர்.

உழவுக்கு முதலிடம் அளித்து உழவர்கள் வாழ்வு ஒளிவீசி மகிழ்ச்சி பொங்கவே தமிழ்நாடு அரசு சூரியகாந்தி அபிவிருத்தி திட்டத்தை வழங்கியுள்ளது.

அதோ வெள்ளி முளைத்துவிட்டது. உதயமாகும் சூரிய ஒளியை எதிர்நோக்கி கழனிக்கு விரையும் உழைக்கும் கரங்களை அன்புடன் வரவேற்கிறது சூரியகாந்தி.

"ஊருக்கு நல்லது சொல்வேன், உண்மை தெரிந்துக் கொள்வேன்".

SUPERIOR COTTON

A new cotton variety, highly superior and suitable for blending with synthetic fibres and replacing imports of this class of fibre, has been evolved at the Coimbatore Regional Research Station of the Indian Agricultural Research Institute.

The cotton, named *Suvin*, is a long staple high strength variety derived from a cross between *Sujata* and Sea Island *St. Vincent*. It equals *Sujata* in yield, but excels it in quality, which is comparable to the best imported Egyptian cotton. The mean fibre length of *Suvin* is 33.8 mm. (1.37 inches) as against 23.3 mm. (1.17 inches) of *Sujata*.

சேலத்தில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில்

சட்டமன்ற உறுப்பினர்

திரு. சோ. ஆறுமுகம் அவர்கள்



விழாவில் சேலம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்
திரு. வெங்கடாசலம் அவர்கள் தலைமை உரையாற்றுதல்,

பெருந்தலைவர் அவர்களுக்கு முன்னாள் சங்க செயலாளர் க. சச்சிதானந்தம்
கைத்தறி ஆடை அணிதல்.



விழாவில் சங்கத் தலைவர் மு. சிவசண்முகம் வரவேற்று உரையாற்றுதல்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்களுக்கு சங்கத் தலைவர் வாழ்த்து மடல் வழங்குதல்.



சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்களுக்கு
சங்கத் தலைவர் கைத்தறி ஆடை அணிவித்தல்.



சட்டமன்ற உறுப்பினர் திரு. சோ. ஆறுமுகம் அவர்கள்
சிறப்பு உரை ஆற்றுதல்.

விருந்தில் சட்டமன்ற உறுப்பினரும் தாய்ச் சங்க பிரதிநிதிகளும்.



விருந்தில் கலந்து கொண்ட சங்க செயற்குழு உறுப்பினர்கள்.

Rice Production Techniques

S. KOLAPPAN

To exploit the utmost in rice production, the right type of plant geometry and the right amount of crop canopy are the two essential pre-requisites required. These thoughts culminated at the beginning with the introduction of Taichung (N) — , in 1964. The country at large, and the rice growing states in particular became aware of the merits of the short statured, nitrogen responsive, high productive dwarf varieties. There also followed, in its wake, the draw backs associated with the variety. Needless to say, there came forcibly, a series of misconceptions on these varieties namely that the dwarf varieties require more fertilisers, they produce grain and straw of low standard and that they are not adaptable to conditions in which local varieties fare well.

It took quite a lot of time to drive these misconceptions away and now the High Yielding dwarf varieties have come to stay. The correct conceptions of dwarf High Yielding varieties should be understood by every extension worker.

Environmental specificity is governed by the climate. The choice of a High Yielding variety is primarily decided by the environment. Even after the choice, environment plays the major role as it is constituted by such unalterable components like intensity of sunlight, day length, delivery of thermal energy, etc., which to a great extent modifies such agronomical practices like sowing, planting, manuring, etc. In short, field management, should synchronise with environmental components, so as to reap the maximum benefit out of the elements.

High Yielding varieties are, contrary to common belief, to a large degree immune to variations of or errors in management practices. However they are critical in regard to one aspect namely, nitrogen management. Many do not appreciate the existence of its three sided aspect namely, applied N, absorbed N and utilised N. Many factors like quantity of application, chemistry of soil, time of application, method of application, etc., go in between the three stages mentioned. Of these factors the easily manipulated, but the often missed item is the method of application, which is vital as far as the farmer is concerned.

Optimum cultural management and nitrogen management are important in order to reap fully the benefits of dwarf high yielding varieties and for obtaining the highest cost-benefit ratio by the farmer.

Some of the basic concepts of High Yielding varieties are narrated below :

Basic concepts :— A High Yielding variety can produce its maximum potential when grown in a favourable physical environment helped by the environmental changes introduced by man.

Physical factors :— Submergence, together with puddling differentiates rice soils from all others, chemically. The rice plant, when grown under flooded conditions is insensitive to many of the soil characteristics which influence the yield of crops grown under non-flooded conditions. In general high paddy yields are associated with soils having high clay content of 40-60%, a 2 : 1 type clay mineral, medium organic content with high degree of humification and good (but not excessive) drainage.

Sunshine is a most important climatic factor that influences the rice yield most. It is possible to double rice yields when closer spacing (in order to utilise fully the spread of sunlight) and varieties insensitive to photoperiodism are used. The criterion in planting such a variety

is that it should receive maximum sunlight during, the ripening period. It has been proved that maximum photo synthesis is required from flowering to maturity, and mutual shading of leaves at this period is a strong yield deterrent.

Day length does not assume great importance in varieties that are insensitive to photo periodism.

Change of growth duration is the effect of photoperiod. Longer the day length, longer will be the growth duration.

Short growth duration plants do not have time to produce enough tillers *i.e.*, enough leaf area; whereas, long growth duration plants become tall and leafy and suffer from mutual shading which results in low light transmission to lower leaves and a lower photosynthesis—respiration rate. It has, therefore been found that a crop duration of 130—140 days could produce optimum physiological factors for the highest production of grain.

Gentle winds are beneficial as it helps in replenishment of CO_2 supply. However strong winds, if they occur before heading results in decrease of number of spikelets, if after heading, in abortive endosperms, and if at pollination sterility.

Temperature not only influence the growth duration but also the growth pattern. In tropics high temperature prove to be a problem. Temperature coefficient of photosynthesis is 1 where as, temperature coefficient of resperation is 2; which means, for every 10 degrees increase in temperature there is 2 times more of resperation (a destructive process) than of photosynthesis. Low temperature inhibits growth of seedlings and inhibit tillering. Low temperature that occurs at spikelet division stage, reduces the number of spikelets and induces sterility. Very low temperature at heading stage can cause choking. In general lower temperature, inhibits growth and prolongs B. vegetative phase ; and high temperature snortens Basic vegetative phase of rice plant. It also shortens the ripening phase Optimum temperature is 25°c—30° C.

Growth of Rice Plant :—The duration of active vegetative phase is a function of the amount of available nitrogen. The time of panicle initiations is a function of daylength and to a small extent of temperature.

Generally, the number of panicle per plant is determined during the vegetative phase; the number of spikelet per panicle during the reproductive phase, and the weight of single grain during the ripening phase. With a large leaf area and adequate nitrogen the plants manufacture a large amount of carbohydrates during the reproductive and ripening phases.

Intensity of light affects manufacture of carbohydrates whereas duration of light affects development of the rice plant.

Cultivation of rice Agronomy : Dipping the seeds in1.10% saline solution not only eliminates chaff and partly filled grains, but also helminthosporium affected grains. Plant protection of the seedlings is more vital than is generally believed. At least two sprayings is essential, especially to eliminate leaf hoppers. It is not the age of the seedlings that decides transplanting, but only its growth and thickness. 4 to 6 leaf is optimum. In pulling care to avoid damage to stem is more important than root damage or leaf damage. Aged seedlings could be used with advantage, if close spacing is adopted and the number of seedlings per hole is increased. It is possible to get moderatly good yields even with 50-60 days old seedlings, provided the cultural and nitrogen management are suitably modified. Top dressing of nursery is not a must. It depends upon the stem size, growth and leaf area of the plants. In nurseries raised during cold months, it would be better to apply $P_2 0_5$ to the nursery at puddle. Seedlings from 'dry-seed bed' is always better, and establishes quickly in mainfield. They are hardy.

In the preperation of mainfield, one very important factor is smooth levelling. A

difference in level of less than an inch at two extreme ends might be the optimum. The number of puddlings to be given does not matter; but what really matters is bringing the puddle to a homogenous condition; and then finally, insuring smooth and perfect levelling. Not more than a film of water is required at the time of transplanting.

Deep planting should be avoided. Seedlings should not be thrust inside the puddle; instead, the finger should be used to guide. Depth of planting should not exceed 2-5 c.m. Soon after planting water should be let into 5-8 c.m. level, and allowed to remain 2-3 days in order to hasten good establishment. This is especially good, during hot summer days. After the 3rd day, water should be drained, and the level maintained at 2-5 c.m.

It is immaterial whether the mainfield is line planted or random planted so long as the optimum population is maintained. The number of seedlings to be planted per hole is decided by the age of seedlings, its growth and its thickness. The duration of the variety is a general factor.

Nitrogen management is one single important factor that contributes to good production. Through incorporation of basal fertilisers is a must. Only a thin film of water should stand at the time of incorporation. Farmers who want to use only a small 'N' level should reduce the basal quantity and put more under top dressings; and those who would use high doses of 'N' should increase the basal dose. Light soils should receive less of basal dose and heavy soils more of it.

Always split applications of top dressings is better. The number should be more in the case of light soils. Time of top dressing is decided by the actual condition and stage of the crop. Method of top dressing is very important. Before top dressing, the field should be predrained. Urea if used, should be mixed with sand 3-5 times its weight, kept for 24 hours, and then top dressed. The fields should be reflooded not earlier than 12 hours and not later than 24 hours. Incorporation of the top dressed urea, with a rotary weeder, if possible, is more beneficial.

Top dressing during the active vegetative phase depends upon the crop condition which is evidenced by the growth and production of green tillers. An index for Jaya is as follows:

Weeks after Transplanting	No of green tillers per squ. met.
2	140
4	320
6	470
8	500

The most critical stage that determine the yield plane of the crop is 3 to 4 weeks after planting.

Poorer growing patches in a field should receive special attention at the time of top dressing.

In general, early application of 'N' promotes tillering and late application increases grain yield by producing heavier spiklets. Higher dose of 'N' at earlier stage might also produce higher tiller mortality. However with split applications tillering is less and so also is tillering mortality.

Length of panicle increases due to top dressing at panicle initiation stage, later applications increases spikelet weight. 'N' application panicle initiation also increases length of flag leaves, thus increasing leaf surface and photosynthetic activity. Application at booting stage increases protein content of the grain.

Careful observation of crop condition is an essential human factor in nitrogent management.

Plant protection: Seed treatment with T. M. T. D. is better than using organo mercurials like agrosan.

Protection of seedling from leaf hoppers is essential. A minimum of 2 sprayings in the

nursery is required. Granular systemic insecticides are better as it gives the seedlings prolonged protection against sucking insects. Green leaf hopper is to be eliminated completely.

Clean bunds and clean cultivation are essential prerequisites. Harvesting should be done as low as possible leaving as less as possible plant debris. Many diseases especially diseases affecting leaf sheath spread from plant debris. Bunds should be free of grass, as far as possible. Subsequent plant protection operations should cover the bund area also.

Stem borer (Yellow) can be effectively controlled by the use of diazinon 5% granules at 1.5 kilogram/ha in standing water on the 15th day and repeating it after 20 days.

Leaf folder should be watched, in the shaded areas of the field, on the lower leaves. Early spraying is essential. The spray should have enough volume to cover the foliage thoroughly and it should be directed to reach the hiding cater pillar.

Building up of leaf hopper population at more than 2-3 per hill has to be effectively controlled. This has to be watched.

General : The package of practices, which, so many blindly follow, are only general recommendations and therefore can only be approximations. Nothing could be more inaccurate than blindly following them. Production of maximum quantity of grain depends in bringing up the rice plant, to exploit fully the elements of nature, in particular, the solar energy. A thorough understanding of the role of the elements and the character of the rice plant, is therefore highly essential.

Every farmer will have to modify the general package of practices, to suit his own specific conditions and unless he acquires the ability to do so, success cant not be his.

The one single factor which contributes to maximising production and income, and which plays vital role in the vegetative phase of the rice plant is nitrogen management. Efficiency in this item depends on the perfect understanding of the plants reaction to environment and the chemistry of nitrogen absorption under puddled conditions.

The use of chemical means of plant protection can, more often than we think, lead to unwanted or inadequate results. Chemical means be the last means of control rather than the first. Intelligent use of the chemicals is a prerequisite to avoid greater harm.

Nothing attracts a farmer more than the prospect of reaping more money. " High production ", " a prosperous nation "—these slogans, though very good and high sounding to be heard by us, make little sense or make little impression on the farmer on whom the nation depends so much for its prosperity. It would therefore pay rich dividends to bear this fact in mind by every extension worker, engaged in this hand and unenviable task.

SULPHUR-COATED UREA

Sulphur-coated nitrogen pellets may be the answer to the farmer's need for a slow release fertilizer, according to research studies conducted at the University of Minnesota, U.S.A.

Sulphur-coated pellets appear especially useful on coarse-taxtured soils subject to nutrient leaching. The pellets dissolve slowly and allow the plant to use up the nitrogen as it becomes available.

The pellets are manufactured by spraying atomized molten sulphur on a molton bed of urea granules. Then they are coated with a film of wax and a microbiocide for longer lasting result. By varying the thickness of the coating, the dissolving rates can be regulated. The sulphur forms, a microscopic sieve that allows nitrogen to move out very slowly making granules especially applicable on coarse-taxtured soils.

கோவையில் நடந்த செயற் குழுவில்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக

துணை வேந்தர் அவர்கள்



விழாவிற்கு துணை வேந்தர் வருகை.



விழாவில் வேளாண்மை பல்கலைக்கழக கிளைச்சங்க
துணை செயலாளரின் வரவேற்பு உரை.



விழாவில் துணை வேந்தர் அவர்களுக்கு சங்க மாநிலத் தலைவர்
மு. சிவசண்முகம் மலர்மாலை அணிவித்தல்.



விழாவில் சங்கத் தலைவர் உரை.

விழாவில் துணை வேந்தர் அவர்களுக்கு மாநில தலைவர் வாழ்த்து மடல் அளித்தல்.

விழாவில் துணை வேந்தர் அவர்கள் உரையாற்றுதல்.



விழா விருந்தில் துணை வேந்தர் அவர்களும் சங்க மத்திய பிரதிநிதிகளும்.



விழாவில் சங்க மத்திய பிரதிநிதி, சு. வடிவேலு நன்றி உரையாற்றுதல்.

சென்னையில்

சங்க செயற் குழு உறுப்பினர்கள் திரு. நா. ஹரிபாஸ்கர் I.A.S.

முன்னாள் வேளாண்மை இயக்குநர்

அவர்களுக்கு அளித்த பிரிவு உபசார விழாவும்

திரு. T. V. அந்தோணி I.A.S.

வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு

அளித்த வரவேற்பு விழாவும்

விழாவில் முன்னாள் வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு
மாநிலப் பொருளாளர் நீ. பாலகிருட்டிணன் மாலை அணிவித்தல்.



விழாவில் மாநிலத் தலைவர், மு. சிவசண்முகம் உரை.



முன்னாள் வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு
முன்னாள் சங்கத் தலைவர் வாழ்த்து மடல் வாசித்து அளித்தல்.

வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு மாநில சங்கத் தலைவர்
வாழ்த்து மடல் வாசித்து அளித்தல்.



வேளாண்மை இயக்குநர் அவர்கள் உரையாற்றுதல்.



விருந்தில் முன்னுள் இயக்குநரும் இந்நாள் இயக்குநரும்
மத்திய சங்க பிரதிநிதிகளுடன்.



விருந்தில் கலந்துகொண்ட சங்க செயற்குழு உறுப்பினர்கள்.



விழாவில் ஆசிரியர் செய்திக் கதிர் நன்றி நவிலல்.

Certain Parameters of Agricultural Development

By

M. SUBRAMANYAM, Msc. (Ag,)

Member—Madras Branch Unit

The foodgrains production in Tamil Nadu, which was 51.06 lakh tonnes in 1968-69, has increased to 72.02 lakh tonnes in 1972-73. The increase in production may be, attributed to widespread adoption of high yielding varieties and other technological innovations. A new era of green revolution has ushered in the agricultural field achieving self-sufficiency in food-grains.

The green revolution is only partial in its achievement. The blessings of it, however, have yet to reach other crops like pulses, cotton, oilseeds, vegetables and fruits. According to 1971 census, the agricultural labourers constituted 26 per cent of the working forces as against 17 per cent in 1961. The sixteenth round of the Nation Sample Survey reveals that nearly two thirds (62.96%) of the households cultivated less than 5 acres. This big chunk of population who are living in villages continue to be still under abject poverty.

This affords a clue that the adoption of technology has benefited mainly, big land owners, while medium, small and marginal cultivators have not shared the prosperity and they still remain neglected partners. Nor could the condition of landless agricultural labourers change visibly.

The most pervasive obstacle to economic progress of villages is poverty. Poverty creates many obstacles to increase agricultural production. Hunger and mal-nutrition reduces man's health and physical energy, his work capacity and even his alertness. The small farmer feels that he would get little, if anything, from the increased production, because of his weak bargaining position. His low income does not permit purchase of modern inputs for productive investment in his farm, which in effect, means that he has no access to either new types of inputs or innovations.

It becomes clear, therefore, that development planning and strategies should be designed to remove the poverty and mal-nutrition at the village level than planning for production *per se*.

We are now in the fag end of the fourth five year plan. The objectives of Five Year Plans with regard to agriculture are mostly increasing food production to feed our population and stepping up production of raw material for moving the wheels of agro-based industries without interruption. With the above objectives in view, a series of projects like I. A. D. P. and I. A. A. P. and H. Y. V. P. were implemented. These projects are 'recipe oriented', advising the cultivator in respect of improved seeds, optimum dose of fertilisation, right type of pesticides, optimum irrigation, etc., and ensuring the supply of the above inputs. The recipe approach has, no doubt, increased the production, but the approach is basically unsound and it has also brought a number of problems, like widening of the gap between the rich and poor in the villages as a result of inadequacy of credit, non-availability of seed, fertiliser and plant protection chemicals.

The approach paper on fifth year plan, rightly focusses the need for removal of poverty and attainment of economic self-reliance are the

two major tasks, which the country has set out to accomplish. With regard to agriculture, the states' objective would be to increase production and reduce poverty. The above goals can be attained only with substantial effort. The innumerable modern inputs no doubt makes much, but they obviously are not the limiting factors over the years ahead. We certainly have the know how to produce all the inputs needed. What we obviously do not know is how to shape institutional arrange ments and administrative procedures to make effective use of our technical knowledge and production capacity and to motivate people to do what is urgently needed.

